Registered as a News Paper in Sri Lanka

# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

දිනක්කතිර්

ஒளி - 01 - கதிர் - 317 | 09.03.2001 | வெள்ளிக்கிழமை | பக்கங்கள் - 08 | விலை ரூபா 5/-

நகையா!
22 கரட்டில் தெரிவு செய்ய இன்றே நாடுங்கள்
A.K.S ஜுவலர்ஸ்
பிரதான வீதி,
களுவாஞ்சிகுடி

# போர் முடிவுக்கு வந்தால் மாத்திரமே பொருளாதாரம் அபிவிருத்தியடையும்

## ஜி.எல். பீரிஸ்

(நமது நிருபர்)

நாடு பொருளாதாரத்தில் அபிவிருத்தி யடைய வேண்டுமானால் போர் நிறுத்தப்பட்டு சமாதானம் ஏற்படவேண்டும் என பிரதி நிதியமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். இரண்டாயிரத்தோராமாண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தை நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவர் மேலும் தெரிவிக்கையில் போருக்கான செலவீனம் அதிகரித்து வருகிறது. இருப்பினும் பலதுறைகளில் அபிவிருத்தி செய்வதற்கு நிதிதேவைப் படுகிறது. நெடுஞ்சாலை, விமான நிலையம், சுகாதார சேவை, மீன்பிடித்துறை

(8ம் பக்கம் பார்க்க)

பாதுகாப்பு வரி அதிகரிப்பு!

கூடிய வெளிநாட்டு வேலை!

சம்பள அதிகரிப்பு இல்லை!

# பாதுகாப்பு செலவு அதிகரிப்பு! அரச செலவீனத்தில் கட்டுப்பாடு!!

(நமது நிருபர்)

**புதிய வரவு செலவுத்திட்டத்தின் பிரகாரம் பாதுகாப்பு நிதி அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பாதுகாப்பு வரியும் ஒரு சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது இதே வேளை அரசாங்க ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு வழங்கப்படவில்லை. அரசாங்க செலவீனங்களில் தீவிர கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.**

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் பதினோராவது பாராளுமன்றத்தின் முதலாவது வரவு செலவுத்திட்டம் நேற்று பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டது.

புதிய வரவு செலவுத்திட்ட அறிக்கையினை பிரதி நிதிய்மைச்சரான பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் வாசித்தார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

மொத்த அரசாங்க கவருமானம் 264.5 பில்லியனாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மொத்த செலவீனம் 387.5 பில்லியனாகும் இதன் பிரகாரம் மொத்த செலவீனம் 387.5 பில்லியனாகும்.

வரவு செலவுத்திட்டப்பற்றாக்குறை அதாவது துண்டு விழும் தொகை 123.1 பில்லியன்களாகும் (ஒரு லட்சத்து 64 ஆயிரத்து 285 மில்லியன் ரூபா)

### பாதுகாப்பு வரி அதிகரிப்பு

இம்முறை பாதுகாப்பு செலவுக்கு கூடியநிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதாவது 75 பில்லியனாக அதிகரிக்கப்பட்டுள்ளது பாதுகாப்பு வரி கடந்த ஆண்டு 6.5 இல் இருந்து 7.5 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக 6100 மில்லியன் ரூபா வருமானமாக கிடைக்கும் என அரசு எதிர்பார்க்கிறது.

### வெளிநாட்டு வேலைவாய்ப்பு அதிகரிப்பு

வெளிநாட்டு வேலை வாய்ப்பு அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்ப ட்டுள்ளது. இதன் பிரகாரம் 75 ஆயிரம் பேருக்கு தொழிற் பயிற்சி வழங்கப்படும்.

வெளிநாடு ஒன்றில் வேலை செய்பவர் மரணித்தால் அவருக்கு வழங்கப்படும் மரண இழப்பீடு இரண்டரை இலட்சத்தில் இருந்து மூன்று இலட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இவர்கள் விபத்துக்குள்ளானால் வழங்கப்படும் நட்டு ஈடு ஒரு இலட்சத்தில் இருந்து இரண்டு இலட்சமாக அதிகரிக்கப் படவுள்ளது. அத்துடன் வெளிநாட்டில் வேலை வாய்ப்பு பெற்றோர் 55 வயதை அடைந்த பின்பு ஓய்வூதியம் வழங்கப்படும்.

அவர்களது பிள்ளைகள் பல்கலை

(8ம் பக்கம் பார்க்க)

## கிரான் துறை சோதனைச் சாவடியில் அடையான அட்டை கிழிப்பு

(நமது நிருபர்)

கிரான் துறையூடாக நேற்றைய தினம் ஆற்றுக்கு அப்பாலுள்ள கிராமங்களிலிருந்து வந்த பொது மக்கள் பலர் இராணுவத்தினரின் கடும் துன்புறுத்தலுக்கு உள்ளாக் கப்பட்டனர். தடாகம் நிறுவனத்தில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தினத்தில் கலந்து கொள்ள வந்த பெண்கள் மீது இந்தச் சோதனைக் கெடுபிடிகள் மேற்கொள்ளப்பட்டன.

சோதனைச் சாவடியூடாக பயணம் செய்த பெண் ஒருவரின் தற்காலிக அடையாள அட்டையை இராணுவவீரர் ஒருவர் கிழித்தெறிந்து விட்டதாகவும் அந்தப் பெண்மணி தெரிவித்தார்.

## தலைக்கவசம் அணிவதில் கால நீடிப்பு

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்வோர் மார்ச் 15ம் திகதி தொடக்கம் தலைக்கவசம் அணிந்து செல்லுமாறு போக்குவரத்துக் கண்காணிப்பு பொலிசார் விடுத்த அறிவித்தலை கால நீடிப்பு செய்யுமாறு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபாலி ஹேமகேயின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

இதனைத்தொடர்ந்து ஏப்ரல் மாதம் முதல் இந்த உத்தரவு அமுலுக்கு வரவுள்ளதாக சிரேஸ்ட பொலிஸ் அத்தியர்சகர் அறிவித்துள்ளார்.

## எண்ணச் சிதம்பரம்

**அரசாங்கத்திடம் சமாதானம் தொடர்பாக எந்த ஒரு திட்டமும் இல்லை**

- ராவய விக்டர் ஐவன்-



*யுத்தத்த நடத்திறதுதான் திட்டமாக இருக்கக்குள்ள சமாதானத்தப்பற்றி எப்படி .....*

## "தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே ஆட்சி செய்ய விரும்புகின்றனர்"

*-மேன்முறையீட்டு நீதிபதி விக்கினேஸ்வரன்-*

(நமது நிருபர்)

"இலங்கையின் வடக்கு-கிழக்கு நிலப்பகுதிக்குரிய பெரும்பான்மையின மக்கள் தங்களது உரிமைகளை மீளப் பெறுவதற்காக அதனை நாடிச் செல்கின்றார்களேயன்றி, தங்களது உரிமைகளை பறிகொடுப்பதற்காக அல்ல. ஓர் தமிழ் பேசும் குடிமகனான நான் னெது தாய் மொழியைப் பேசவில்லை எனில், மிக விரை விலேயே நான் எனது சகோதர மொழியைப் பேச நிர்ப்பந்திக்கப் படுவேன்" இவ்வாறு கடந்த புதனன்று புதிதாக கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாகப் பதவியேற்ற நீதிபதி சி.வி.விக்கினேஸ்வரன் தனது பதவியையேற்று உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் "இன்று, மலட்டுத்தனம் நிரம்பியதும்,கையாலாகாததனமுமான ஓர் சட்ட உடன்பாடுடைய அரசியல் திட்டம் வடக்குக் கிழக்கு மாவட்டங்களிலுள்ள தமிழ்பேசும் மக்களின் மத்தியில் தோன்றி வருகிறது. தமிழ் மக்கள் தங்களது சொந்த மொழியின் மூலம் தங்களைத் தாங்களே ஆட்சி செய்ய விரும்புகிறார்கள். இதில் வேறு எந்தவிதமான தலையீட்டையும் அவர்கள் விரும்பவில்லை என அவர் தமதுரையில் தெரிவித்துள்ளார்.

## ஊரடங்கு அமுல் பஸ் சேதம்

(காலி நிருபர்)

காலி நகரத்தில் மாணவன் ஒருவர் உயிரிழந்த சம்பவத்தைத் தொடர்ந்து நேற்று இரவு ஊரடங்கு சட்டம் அமுல் படுத் தப்பட்டது.

சைக்கிளில் பயணம் செய்த மாணவர் ஒருவர் பஸ் வண்டியுடன் மோதி உயிரிழந்துள்ளார். இதனைத் தொடர்ந்து மாணவர்கள் பஸ்வண்டிகளைத் தாக்கியுள்ளனர்

இச்சம்பவத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட பதட்டநிலமையினை தணிப்பதற்காக நேற்று மாலை தொடக்கம் இன்று காலை வரை ஊரடங்கு சட்டம் அமுல் படுத்தப்பட்டதாக தெரியவருகிறது.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு
ஆண்களுக்கு:-
- ஓட்டோ மெக்கானிக்
- ஓட்டோ எலக்ரீஷியன்
- ஓட்டோ பெயின்ரர்
- ஓட்டோ ரிங்கர்
- பாமர்
- பிளம்பர்

வேலைவாய்ப்புக்கள்...
தங்குமிடம், மருத்துவம் இலவசம்
மிக விரைவான பயணங்களுக்கு நாடுங்கள்
நியூ பாஹிம் என்டர் பிரைஸஸ்
LL No 736
283/1, மெயின் வீதி,
புறக்கோட்டை
மட்டக்களப்பில் தொடர்புக்கு!
151/1, 151/2 பிரதானவீதி
காத்தான்குடி-02
தொ.பே:065-47090,
ADVT

தினக்கதிர்
த.பெ. இல: 06
07, எல்லை வீதி தெற்கு,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 23055
E-mail :- tkathir@snet.lk

## அமெரிக்கத் தூதுவர் முன்வருவாரா?

இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸ் முதலில் திருகோணமலைக்கும் பின்னர் மட்டக்களப்புக்கும் இவ்வாரம் யாழ்ப்பாணத்துக்கும் சென்று திரும்பியிருக்கிறார். வன்னிப் பகுதிக்கும் அவர் சென்று சில தினங்களாவது தங்கியிருந்து அங்குள்ள மக்களையும் சந்தித்து நிலைமைகளையும் நேரில் பார்த்திருந்தால் அவருக்கு பயனுள்ளதாயிருந்திருக்கும்.

அமெரிக்கத் தூதுவரின் இந்தச் சுற்றுப் பயணத்தில் அரசாங்கம் பிரசாரம் செய்யும் ''பயங்கரவாதம்'' பற்றியும், அரசின் படை நடவடிக்கை பற்றியும் மக்களிடமிருந்து கேட்டறிந்தும் எஞ்சியுள்ள சிதைவுகளைப் பார்த்தும் அறிந்திருப்பார்.

இலங்கையில் நடைபெறும் போருக்கு எவ்வளவு விரைவாக முடிவுகாண முடியுமோ அவ்வளவு விரைவாக முடிவு காணப்பட வேண்டுமென்று அமெரிக்கத் தூதுவர் அங்கு தெரிவித்திருக்கிறார்.

இராணுவ நடவடிக்கைகள் மூலம் இன நெருக் கடிக்குத் தீர்வு காண முடியாதென்றும் அமெரிக்கத் தூதுவர் கூறியிருக்கிறார்.

இன்னும் ஏழாயிரம் பேர் படைக்கு வந்து சேர்ந்தால் மூன்று வருடங்களில் போர் மூலம் இனப்பிரச்சினைக்கு முடிவு காண முடியுமென்று போர் முரசம் கொட்டி வரும் பிரதமர் இரத்தினசிறி விக்கிரமநாயக்காவின் காதில் விழும்படி இராணுவ நடவடிக்கையால் தீர்வு காண முடியாதென்ற தமது கருத்தைக் கொழும்பிலிருந்து உரக்கச் சொல்ல வேண்டும்.

பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான துணிவும் விருப்பமுமே தற்போது அவசியமானதென்றும் தூதுவர் கூறியிருக்கிறார். இந்தத் துணிவு இப்பொழுது யாருக்கு இருக்கிறதென்பதையும் தூதுவர் அறிந்திருப்பார் என்று நம்பலாம்.

சில விசயங்களில் அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸ் சரியான அறிவைக் கொண்டிருக்கவில்லையா; அல்லது அறிந்திருந்தாலும் வெளியே சொல்ல முடியாத நிலையிலிருக்கிறாரா என்பது தெரியவில்லை.

விடுதலைப் புலிகள் ஒரு ஜனநாயக அகிம்சை வழி அரசியல் அமைப்பாக மாறுமெனில் அமெரிக்கா உட்பட அனைத்து நாடுகளும் அந்த அமைப்பு குறித்துத் தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளும் என்று அமெரிக்கத் தூதுவர் கூறியிருக்கிறார்.

ஜனநாயக அகிம்சை வழி அரசியல் பற்றி ஈழத்தமிழ் மக்களுக்கு அமெரிக்கா சொல்லித்தான் தெரியவேண்டுமென்பதில்லை.

1948 ஆம் ஆண்டு பிரிட்டிஷாரிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து தமிழ் மக்கள் ஜனநாயக வழியைத்தான் கடைப்பிடித்து வந்தனர்.

இலங்கைப் பாராளுமன்றத்துக்கு பெரும்பான்மைச் சமூக மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்து அனுப்பி வந்தனர். இதேபோல் தமிழ் மக்களும் தங்கள் பிரதிநிதிகளைத் தங்கள் தாயக பூமியிலிருந்து தெரிவுசெய்து அனுப்பினர்.

தென்னிலங்கை மக்களிடமிருந்து பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த அரசியல் கட்சிகள் ஆணை பெற்றுச் சென்றது போல் வடக்குக் கிழக்கு மக்களின் ஆணையைப் பெற்று தமிழ்ப் பிரதிநிதிகளும் பாராளுமன்றம் சென்றனர்.

ஆனால், இலங்கையிலுள்ள பெரும்பான்மை ஜனநாயகம்தான் பாராளுமன்றத்தில் ஆதிக்கம் செலுத்தியதே தவிர தமிழ் மக்களின் ஜனநாயகம் புறக்கணிக்கப்பட்டது.

1956 ஆம் ஆண்டில் பண்டாரநாயகா சிங்களம் மட்டும் மசோதாவைக் கொண்டுவந்த போது வடக்குக் கிழக்கிலிருந்து சென்ற பிரதிநிதிகள் அத்தனைபேரும் ஒரே குரலில் எதிர்த்தும் அந்த மசோதா நிறைவேற்றப்பட்டுச் சட்டமாகியது.

தமிழ் மக்கள் அளித்த ஆணை பெரும்பான்மை ஜனநாயகத்தினால் நிராகரிக்கப்பட்டது. இதேபோன்று தமிழ் மக்களுக்கு எதிரான மசோதாக்கள், பிரேரணைகள், யாவும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளின் எதிர்ப்பையும் பொருட்படுத் தாமல் அவற்றை நிராகரித்து நிறைவேற்றப்பட்டன.

இதே சமயம் தமிழ் மண்ணை இலங்கை சுதந்திர மடைந்த காலத்திலிருந்து விவசாய அபிவிருத்தி என்ற பெயரில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்ற ங்கள் மூலம் அபகரிக்கத் தொடங்கி இன்று வரை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இவற்றை எதிர்த்தும், தமிழ் மக்கள் சுதந்திரமாகவும், சுய நிர்ணய உரிமையுடனும், பாதுகாப்பாகவும், தங்கள் தாயக பூமியில் சமத்துவமாக வாழ்வதற்குச் சமஷ்டி ஆட்சி அமைப்பே ஒரே வழியென்று ஜனநாயக ரீதியில் கோரிக்கை வைத்தனர்.

இதற்கும் பெரும்பான்மையினர் இணங்காததால் காந்தீய வழியில் அகிம்சை முறையில் போராட்டம் நடத்தினர். இவை ஆயுத பலத்தால் அடக்கி ஒடுக்கப்பட்டு 1958 ஆம் ஆண்டு முதல் 1983 ஆம் ஆண்டு வரை குண்டர்களையும் தூண்டிவிட்டு தமிழின ஒழிப்பில் ஆட்சியாளர்கள் ஈடுபட்டனர்.

ஜனநாயக முறையும் அகிம்சை வழியும் தோல்விய டைந்ததால் தான் தமிழ் இளைஞர்கள் தம்மையும், தம் மண்ணையும், மக்களையும், பாதுகாக்க ஆயுதம் ஏந்தினர்.

இதனால் இன ஒழிப்பைத் தொடர முடியாதவர்கள் விடுதலைப் போராட்டத்துக்குப் பயங்கரவாதம் என்ற முத்திரை குத்தி இன ஒழிப்பைத் தொடர முற்படுகின்றனர்.

இது அமெரிக்கத் தூதுவருக்கும் வெளிநாட்டவருக்கும் தெரியாமலிருக்கலாம். அல்லது தெரிந்தும் தெரியாதது மாதிரி யும் இருக்கலாம்.

அமெரிக்கத் தூதுவர் சொல்லும் ஜனநாயக வாழ்க்கைக்குத் திரும்ப வேண்டுமானால் இன்றைய பெரும்பான்மை ஜனநாயக ஆதிக்க முறையில் மாற்றம் செய்யப்படவேண்டும். தமிழருக்கு சுயநிர்ணய உரிமை வேண்டும்.

அமெரிக்கத் தூதுவரும் அமெரிக்காவும் அவர் சொல் லும் பிற நாடுகளும் இதற்கு வழி காண முன்வரவேண்டுமே!

### போரின் கொடுமையும் - பொருளாதாரத் தடையும்

# சிறுவர்கள் அவலம்

அண்மையில் செங்கலடி மத்திய கல்லூரியில் இடம் பெற்ற இல்லவிளையாட்டுப் போட்டியின் போது கல்லூரி மாணவர்களின் வினோத உடைப்போட்டி இடம் பெற்றது. அந்த வினோத உடைப்போட்டியில் பல மாணவர்கள் பல விதமான உடைகளை அணிந்து வினோதமாகக் காட்சியளித்தார்கள். அந்த வினோத உடைதாரிகளுள் தோன்றிய வித்தியாசமானதும் யதார்த்தத்தை வெளிப்படுத்தியதுமான வினோத உடைதான் இங்கு காணும் படங்கள். போரின் கொடுமைகளையும், பொருளாதாரத் தடையையும் இந்த வினோத உடைப் போட்டி நிகழ்ச்சி ஒரு நாடகமாக நடித்துக் காட்டியது போலிருந்தது.

இப் படங்களில் காணப்படும் சிறுவர்கள் மோகன் டிலுக்ஷன் (13 வயது), மோகன் டிலான்(7 வயது), மோகன் டிலக்ஷனா (6 வயது) இந்த மூவரும் ஒரே குடும்பத்தையும் ஒரே விளையாட்டு இல்லத்தையும் சேர்ந்தவர்கள். மாணவன் டிலுக்ஷன் தனது வலது காலை இழந்தவாறும் முகத்தில் விமானக் குண்டு வீச்சில் காயங்கள் ஏற்பட்டவாறும் ஊன்று கோலுடன் காட்சியளித்தான். மற்றைய மாணவனான டிலான் அதே விபத்தில் தனது கண் ஒன்றை இழந்தவாறும் மற்றைய சிறுமி தனது கை ஒன்றை இழந்தவாறும் காட்சியளித்தார்கள். இவர்களில் காணப்பட்ட காயங்கள் உண்மையான காயங்களைப் போன்று உருவாக்கப்பட்டதுதான் ஆச்சரியமானது. சினிமாப் படங்களில் போடப்பட்ட ஒப்பனையின் சாயலை ஒத்து இருந்தது.

அதனைப் பார்த்து நின்ற பார்வையாளர்கள் கைகொட்டி ஆரவாரம் செய்தவேளை மத்தியஸ்தரால் சிறுவர்களை பேட்டிகாணும் நிகழ்ச்சி இடம் பெற்றது. அதனைக் கண் ணுற்றவர்கள் சிலர் அழுது விட்டனர். காரணம் அது ஒரு வினோத உடைப் போட்டியாக அன்றி அது ஒரு உண்மைச் சம்பவம் போன்று அவர்களது நடிப்புத்திறன் வெளிப்பட்டது.

காலை இழந்த சிறுவனிடம் மத்தியஸ்தர் கேள்விகளைத் தொடுத்தார்.

**கேள்வி: நீங்கள் எங்கே இருந்து வருகின்றீர்கள்?**
**பதில்:** நாங்கள் வன்னி மாவட்டம் முல்லைத்தீவைச் சேர்ந்தவர்கள்.

**கேள்வி: உங்களுக்கு என்ன நடந்தது?**
**பதில்:** விமானக்குண்டு வீச்சில் எங்கள் தாய் தகப்பனையும் இழந்து எனது காலும் தம்பியின் கண்ணும் தங்கையின் கையும் போய்விட்டது.



அருகில் அந்தச் சிறு வன் பே....பே(BA) என்று வானத்தில் இருந்து விமானம் பறந்து குண்டு வீசியது போன்று கைகளால் சைகைகாட்டி ஆவேசமாகக் கத்தியதுடன் இந்த விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராக ஒரு தமிழ் அரசியல்வாதி கலந்து கொண்டார் அவரின் காவல் கடமைக்கு நிறுத்தப்பட்டிருந்த சீருடையினரைச் சுட்டிக்காட்டி அவர்கள் துப்பாக்கியால் சுடுவது போன்று சைகை காண் பித்தான். அந்தக் காட்சி மிகவும் தத்ரூபமாக அமைந்து இருந்தது.

தனது தலையில் தன் கையால் அடித்து தனது கண்ணையும் தமயனின் காலையும் தங்கையின் கையையும் காண பித்து பே....பே என்று அழுதான்.




அழுகையில் உண்மையில் அந்தச் சிறுவனின் கண்களில் கண்ணீர் வந்து விட்டது. இதனைப் பார்த்து நின்ற மாணவர்களும் பெற்றோர்களும் கண் கலங்கி விட்டனர், சிலர் அழுதும் விட்டனர்.

உடனே மத்தியஸ் தரைக் குறுக்கிட்ட மூத்த சகோதரன் எனது தம்பியாலும், தங்கையாலும் வாய் பேச முடியாது. அவர்கள் நன்றாக கெட்டி த்தனமாகப் படித்தவர்கள் குண்டு வீச்சில் எங்கள் பெற்றோர் கண்முன்னே துடிதுடித்து இறந்ததைக் கண்டே இவர்கள் ஊமையாகி விட்டார்கள் என்று கூறினான்.

இந்தக் காட்சியைப் பார்த்து நின்ற அனைவரது உள்ளங்களும் கலங்கித் தடுமாறின.

மத்தியஸ்தர் மீண்டும் மூத்த சகோதரனிடம் கேள்வி யைத் தொடுத்தார்.

**கேள்வி: நீங்கள் பாடசாலைக்குச் செல்லவில்லையா?**
**பதில்:** நான் 7ஆம் ஆண்டில் படித்தேன் குண்டு வீச்சினால் எங்கள் பாடசாலை இடிந்து தரைமட்டமாகி விட்டது. நாங்கள் படிக்க பள்ளிக்கூடமும் கிடையாது. இருக்க வீடும் கிடையாது. நாங்கள் அனாதைகளாய், அகதிகளாய் இப்போது தெருத் தெருவாகப் பிச்சை எடுத்துத் திரிகின்றோம் என்று கூறினான்.

**கேள்வி: அப்படியானால் எப்படி ஜீவனம் நடத்து கிறீர்கள்?**
**பதில்:** மரத்தின் அடிவாரம் எங்கள் வீடு. பகலில் சூரியனும், இரவில் சந்திரனும்தான் எங்களுக்குத் துணை என்று பட்டென்று பதில் கூறினான்.

மத்தியஸ்தரும் தனது மனதில் உள்ள துக்கத்தை மறைக்க முடியாமல் கொஞ்சம் தடுமாறினார். பின் மீண்டும் கேள்வி கேட்டார்.

**கேள்வி: நீங்கள் இங்கே வந்ததன் நோக்கம் என்ன?**
**பதில்:** இந்தக் கொடுமையான யுத்தத்தினாலும், பொருளாதாரத் தடைகளாலும் எவ்வாறு பாதிக் கப்பட்டுள்ளோம் என்று பாருங்கள் யுத்தத்தை விரும்புபவர்களே! இந்த நிலை இன்று எங்களுக்கு நாளை உங்கள் பிள்ளைகளுக்கு. இனி வரும் சிறுவர்கள் எங்களது உலகம் இவ்வாறுதான் இருக்கும் என்று கூறி அவர்கள் அவ்விடத்தை விட்டகன்றனர்.

இந்தச் சிறுவர்கள் நடித்துக் காட்டிய வினோத உடையானது யதார்த்தத்தை வெளிக்காட்டியது. இது ஒரு நடிப்பாக இருந்தாலும் நமது நாட்டின் வட-கிழக்கு பகுதிகளில் இது போன்று சம்பவங்களும் இவ்வாறான சிறுவர்களும் தினம் உருவாகிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

-செங்கலடியான்-

# கல்முனை சிறைக்கூடத்தை மட்டக்களப்புக்கு மாற்ற எதிர்ப்பு

(யூ.எம்.இஸ்ஹாக் கல்முனை)

அரை நூற்றாண்டுக்கு மேலாக இயங்கி வந்த சிறைக்கூடத்தை கல்முனையை விட்டு இடமாற்றாது தொடர்ந்து இயங்க நீதி அமைச்சர் ஆணை பிறப்பிக்க வேண்டும்.

இவ்வாறு கல்முனை பிரதேச சபை முன்னாள் உறுப்பினரும், அம்பாறை மாவட்ட முஸ்லீம் காங்கிரஸ் கொள்கை பரப்பு செயலாளருமான ஏ.அப்துல் கபூர் நீதி அமைச்சர் பெற்றிவீரக்கோனுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கேட்டுள்ளார்.

இக்கடிதத்தின் பிரதிகள் கிழக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு, கிராமிய வீடமைப்பு அமைச்சர் பே.'.ரியல் அஸ்.'.ரப் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் யூ.எல்.எம்.மொகைடீன் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நீதி அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் ஜனாப் அப்துல் கபூர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கல்முனை கரையோர மாவட்டம் உருவாகுவதற்கு காலம் கனிந்து வரும் இவ்வேளையில் கடந்த 60 ஆண்டுகளாக கல்முனையில் நிரந்தரமாக இயங்கி வந்த சிறைக்கூடம் மட்டக்களப்பு சிறைசாலையுடன் இணைக்கப்படுவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளை இப்பிரதேச மக்கள் அறிந்து அதிர்ச்சியும், கவலையும் அடைந்துள்ளார்கள்.

போக்குவரத்து, இராணுவ சுற்றிவளைப்புத் தேடுதல்கள், சோதனை சாவடிகளில் நடக்கும் கெடுபிடிகளுக்கு மத்தியில் பொத்துவில் தொடக்கம் பெரிய நீலாவணை வரையுள்ள மக்கள் சிறைக்கூடத்திலுள்ள தங்களின் உறவினர்களை பார்வையிடுவதற்காக மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு செல்ல வேண்டுமென நினைப்பது நியாயமற்ற நடவடிக்கையாகும்.

கல்முனையில் கடந்த 60 ஆண்டுகளாக இயங்கி வந்த சிறைக்கூட்டத்திற்கு சொந்தமான இடத்தைப் பெற்று கட்டடத்தை அமைக்கத் தவறிய பொறுப்பை இப்பிரதேச அரசியல்வாதிகளும் சம்பந்தப்பட்ட இலாகா பொறுப்பதிகாரிகளுமே பொறுப்பேற்க வேண்டும்.

இப்பிரதேச மக்களின் நலன்கருதி கல்முனை சிறைக்கூடம் தொடர்ந்தும் கல்முனையில் செயல்பட ஆவன செய்யவேண்டும் என்று அப்துல் கபூர் அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் கேட்டுள்ளார்.

# துறை நீலாவணைக் கிராமத்துக்கு பூரணமான நீர் விநியோகிக்கப்படும்

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் நிலவி வரும் குடிநீர் பிரச்சி' னைக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில், பாரிய திட்டம் ஒன்றை வகுத்து, படிப்படியாக நடைமுறைப்படுத்தி வருவதாக, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் தலைவர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார். அண்மையில் இம் மாவட்டங்களுக்கு இச்சபையின் கீழ் புதிதாக பொறியியலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். துறை நீலாவணைக் கிராமத்தில் நீண்ட நாட்களாக நிலவி வரும் குடிநீர்ப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில், தனது இணைப்பாளர் ஊடாக தரவுகளைச் சேகரித்து உள்ளதாகவும், இக்குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்பட்டு, துறைநீலாவணைக் கிராமத்துக்கு போதுமான அளவு நீர் விநியோகிக்கப்படும் என மேலும் தெரிவித்தார்.

# ''சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும் சமுதாயத்திலிருந்து ஓய்வு பெற முடியாது''

– வலயக் கல்விப்பணிப்பாளர் நாகேந்திரம் –

(ஓட்டமாவடி நிருபர்)

ஒருவர் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற போதிலும் ஒருபோதும் சமுதாயத்திலிருந்து அவர் ஓய்வு பெற்றுச் செல்ல முடியாது. ஏனெனில் அவர்கள் சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய பணிகள் பலவுள்ளன. சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்ற ஒவ்வொருவருக்கும் சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய பணிகளை செய்வதற்கு முன்வரவேண்டும்.

இவ்வாறு கல்குடா வலய கல்விப்பணிப்பாளர் எஸ்.நாகேந்திரம் தெரிவித்தார்.

மட்/ஓட்டமாவடி பாத்திமா பாலிகா மகா வித்தியாலயத்தின் அதிபர் அல்ஹாஜ் எம்.ரீ.அப்துல் ஸலாம் ஓய்வு பெற்றுச் செல்வதை முன்னிட்டு அவரது சேவை நலன்களை பாராட்டி கௌரவிக்கும் பிரியாவிடை நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாடசாலையின் தற்போதைய அதிபர் எச்.எம்.அப்துல் ஜப்பார் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் தொடர்ந்து உரையாற்றுகையில்

முன்னாள் அதிபர் தமது சிறந்த ஆசிரியராக, சேவைக் காலப் பயிற்சி ஆலோசகராக, பிரதியதிபராக, அதிபராக பலவேறு கல்விச் சேவைகள் ஆற்றியுள்ளார். இப்பகுதியில் மகளிர் பாடசாலை ஒன்று உருவாக்கப்பட அவர் கண்ட கனவும், எடுத்த முயற்சிகளும் நனவாகி விட்டன. நல்ல கல்விப் பாரம்பரியம் ஒன்றினை அவர் உருவாக்கியுள்ளார். இச்சூழ்நிலை தொடரும் காலங்களிலும் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும் என்றார்.

பிரதிக்கல்விப் பணிப்பாளர் யூ.எல்.எம். ஜெய்னுதீன் தனதுரையில் முன்னாள் அதிபர் 32 வருடங்கள் தொடர்ச்சியாக பல்வேறுபட்ட கல்விப்பணிகளை ஆற்றியுள்ளார். கல்வித் துறையிலும், விளையாட்டு, சுற்றுலா போன்ற இணைப்பாட விதானத்துறைகளிலும் இப்பாடசாலை அபிவிருத்தி பெற அரும் பாடுபட்டார் என்றார்.

பெண்கள் மத்தியில் கல்வி விழிப்புணர்வு ஏற்பட்டு விட்டால் அது முழுச்சமுதாயத்தின் கல்வி மறுமலர்ச்சிக்கும் வழி ஏற்படுத்துவதாய் அமையும். அந்த வகையில் மகளிர் கல்விக்கு பெரும் பணிபுரிந்த எம்.ரீ.அப்துல் ஸலாம் அதிபரை வாழும் போதே வாழ்த்துவது வரவேற்கத்தக்கது என்றார்.

இவ் வைபவத்தில். பிரதி கல்விப்பணிப்பாளர் எம்.ஐ.சேருஅலி, உதவிக்கல்விப் பணிப்பாளர்களான எம்.எல். அலியார், எம்.எஸ்.சரீபுதீன், ஓட்டமாவடி தேசிய பாடசாலை அதிபர் எம்.எல்.எச்.முகம்மது ஆகியோரும் உரையாற்றினார்கள்.

# ஒரே தூரத்திற்கு வெவ்வேறு கட்டணம்

(எழுவான்)

களுவாஞ்சிக்குடி பகுதியில் சுமார் நாற்பதிற்கும் மேலான முற்சக்கர வண்டிகள்(ஆட்டோ) போக்குவரத்து கடமைகளில் ஈடுபட்டு வருகின்றன. இந்த ஆட்டோ உரிமையாளர்களுக்கும் ஓட்டுனர்களுக்கும் என தனியான சங்கமோ, கூட்டமைப்போ இல்லாததால் ஒவ்வொருவரும் குறிப்பிட்ட தூரத்திற்கு ஒவ்வொரு கட்டணத்தை அறவிடுகின்றனர். பட்டிருப்பிலிருந்து போரதீவுக்கு போவதற்கு ஐம்பது ரூபாவும், எழுபத்தைந்து ரூபாவும் அறவிடுகின்றார்கள்.



தினக்கதிரில் வெளியான செய்தியின் பின் ஒரு பகுதி திருத்தியமைக்கப்படும் களுவாஞ்சிகுடி தபாலகம்

(களுவாஞ்சிகுடி நிருபர் எஸ். ரவீந்திரன்)

# சமாதானம் தொடர்பான ஆக்கங்களை நூல்களாக வெளியிடும் முயற்சி

(மைக்கல்)

தேசிய மட்டத்திலும், சமூக மட்டத்திலும், மதங்களுக்கிடையே ஒற்றுமையையும், சமூகங்களுக்கிடையே நல்லுறவையும் அபிவிருத்தி செய்யும் முகமாக கிழக்கிலங்கை மனித வள பொருளாதார அபிவிருத்தி நிறுவனம் இவ்வாண்டில் இருந்து சமாதானம் தொடர்பான ஆக்கங்களை வெளியிடும் முயற்சியில் இறங்கியுள்ளது.

சமாதானத்தை நிலைக்களனாகக் கொண்ட பல்வேறு கோணங்களிலும், சமூக மற்றும் தேசிய ஒற்றுமையை வலியுறுத்தும் கட்டுரைகள், நாவல்கள், கவிதைகள் என்பன எழுத்தாளர்கள் அறிஞர்கள், கல்விமான்கள், கவிஞர்களிடமிருந்து நூல்களாக வெளியிட வரவேற்கப்படுகின்றன என்றும் பிரசுரத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும் ஆக்கங்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும் எனவும் இந்நிறுவனம் தெரிவிக்கின்றது.

# சிறுமியரை திருமணம் செய்ய வற்புறுத்துவது கொடூரமானது

– யுனிசெவ் இயக்குனர் –

(நமது நிருபர்)

''சிறுவர்களை அதிலும் முக்கியமாக சிறுமியரை பால்யத் திருமணம் செய்யுமாறு வற்புறுத்துவது உடல் உள ரீதியாக அவர்களுக்கு இழைக்கப்படும் பெரும் துன்புறுத்தலாகும்.

இவ்வாறு யுனிசெவ் நிறுவனத்தின் இயக்குனர் கரோல் பெலாமி தெரிவித்துள்ளார்.

''இது அவர்களது தனி மனித சுதந்திரம் வளர்ச்சியை ஊறுசெய்யும் ஒரு விடயமாகும்'' எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் யுனிசெப் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில், பால்யத் திருமணம் ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்படவேண்டும் எனவும் ஆபிரிக்க மற்றும் தென்னாசிய நாடுகளில் பொதுவாகக் காணப்படுகின்ற இப்பிரச்சினையால், குறிப்பாக பெண்கள் பாலியல் ரீதியாகக் கீழ்மைப்படுத்தப்படுகிறார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச மகளிர் தினத்துக்கு ஒரு நாள் முன்பாக விடுக்கப்பட்டுள்ள இவ்வறிக்கையில், கல்வி கற்று, எதிர்கால வாழ்வுக்குத் தம்மைத் தயார் படுத்தும் சிறுவர்களின் அடிப்படை உரிமையை பால்யத் திருமணம் தடுக்கிறது. இதனால் முதிர்ச்சியடைந்த நிலையில் தாய்மை அடையும் 19 வயதுக்குட்பட்ட பல பெண்கள் மரணித்துள்ளனர்.

மேலும், இவ்வளவு இளவயதில் தாயாகும் இவர்களால் தமது குழந்தைகளை உரியவாறு வளர்க்க முடிவதில்லை. இதனால் தலைமுறையே சீரழியும் நிலை ஏற்படுகிறது என அவ்வறிக்கை மேலும் குறிப்பிடுகின்றது.

# காங்கேயனோடை வித்தியாலயத்தின் விளையாட்டுப் போட்டி

(ஆரையம்பதி நிருபர்)

காங்கேயனோடை ஹிஸ்புல்லாஹ் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று பி.ப 2.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஏ.சி.எம்.றிபாய் (ஜே.பி) தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்ச்சியில் பிரதம அதிதிகளாக அமைச்சர் பேரியல் அஷ்ர.'.ப் தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் தலைவர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் மற்றும் கௌரவ விருந்தினர்களாக மண்முனைப் பற்று பிரதேச கல்விப்பணிப்பாளர் கே.தியாகராஜா ஜனபா ரமிஸா ஹிஸ்புல்லாஹ் சிறப்பு விருந்தினர்களாக மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் கே.சிவநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# தப்பியோடிய படையினருக்கு மேலும் மன்னிப்புக்காலம் நீடிப்பு

(கொழும்பு)

இலங்கை இராணுவத்திலிருந்து தப்பியோடியதாகக் கருதப்படும் இருபத்தையாயிரம் பேர்களையும் திருப்பிப் படைக்கு எடுப்பதற்காக மேலும் ஒன்பது தினங்களுக்கு அவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கும் திகதியை அரசு நீடித்திருக்கிறது.

தப்பியோடிய படையினரை மீண்டும் படையில் சேர்த்துக் கொள்வதற்கு மன்னிப்பு வழங்கும் காலத்தை நீடித்திருப்பதன் மூலம் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான முயற்சிகளை நோர்வே தொடர்ந்து கொண்டிருந்தாலும் புலிகளுக்கு எதிராகபோரைத் தொடர்ந்து முன்னெடுப்பதையே நோக்கமாக இருப்பதை எடுத்துக் காட்டுகிறது.

இன்னும் இரண்டு மாதங்களில் பேச்சுவார்த்தை தொடருமென்று ஜனாதிபதி சந்திரிகா இந்தியாவில் அளித்த பேட்டியின் போது தெரிவித்திருந்தார்.

ஆனாலும் எங்களுக்கு ஆட்கள் குறைவாக இருக்கிறது ஆட்களை எடுக்க வேண்டும். ஒழுங்கு செய்ய வேண்டியது அவசியம் என்று இராணுவ தளபதி லெப்.ஜெனரல் பலகல்ல கூறுகிறார். போர் வீரர்களைக் கௌரவிக்க வேண்டுமென்ற கிராம மட்டத்திலான பிரசாரம் தப்பியோடிய கைதிகள் திரும்புவதற்கு வழிவகுக்குமென்று படைத்தளபதி நம்புகிறார்.

# வாழ்வோசையின் விளையாட்டுப் போட்டி

வாழ்வோசை வை.எம்.சீ.ஏ செவிப்புலனற்ற சிறார்களுக்கான பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப்போட்டி இன்று பி.ப 3.00 மணிக்கு மட்/இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சிகளில் பிரதம விருந்தினராக ரீ.பொன்னம்பலம் மட்/வலயக்கல்விப்பணிப்பாளர் கலந்து கொள்ளவுள்ளார்.

# அ.தி.மு.க உறவை முறிக்க மூப்பனார் தயக்கம், காங்கிரசை கழற்றிவிட திட்டமா?

(சென்னை)

ஆலோசனை, தீவிர ஆலோசனை என்று சொல்லி அதி.மு.க.வில் உறவை முறித்துக் கொள்ள மூப்பனார் தயக்கம் காட்டி வருவதும், காலம் தாழ்த்தி வருவதும், காங்கிரசை கழற்றி விடும் திட்டமோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது.

ஜெயலலிதாவும், மூப்பனாரும் ஏற்கனவே ஒருவரோடு ஒருவர் பேசி முடிவுக்கு வந்து விட்டார்கள் என்ற பலமான சந்தேகம் டெல்லி காங்கிரஸ் தலைவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இதனால்தான் மூப்பனாரோ அல்லது தமா.கா. தரப்பில் வேறு யாருமோ இது வரையில் கூட்டணியில் பா.ம.க.வை சேர்த்து கொண்டதற்கும், புதுவையில் சுழற்சி முறையில் ஆட்சியென்று பாம.க.வுடன் ஜெயலலிதா தன்னிச்சையாக உடன்பாடு செய்து கொண்டது குறித்தோ தங்களது கண்டனத்தையும், எதிர்ப்பையும் வெளியிடாமல் இருக்கிறார்கள். கம்யூனிஸ்டு கட்சிகள் கூட இந்த உடன்பாட்டை நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்கள்.

ஆனால் த.மா.கா. தரப்பில் இதுவரையில் இதுபற்றி கருத்து தெரிவிக்கப்படவில்லை. எனவே, கூட்டணியில் பா.ம.க. இணையப் போகிறது என்பதும், தமிழகத்தில் அந்த கட்சிக்கு 27 தொகுதிகள் ஒதுக்கப்படப் போகிறதென்பதும், புதுவையில் சுழற்சி முறை ஆட்சி உடன்பாடு ஏற்படப் போகிறதென்பதும் இதன் மூலம் காங்கிரசுக்கு கதவு அடைக்கப்பட போகிறதென்பதும் மூப்பனாருக்கு முன் கூட்டியே தெரிந்திருக்கிறது என்று தமிழக காங்கிரஸ்காரர்கள் சிலர் மேலிடத்தின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர். ஆரம்பத்தில் இதை நம்ப மறுத்த காங்கிரஸ் மேலிடம் இப்போது மூப்பனாரின் நீண்ட மவுனம் மற்றும் தயக்கத்திற்கு பிறகு நம்பத் தலைப்பட்டுள்ளனர்.

## த.மா.கா.வுக்கு மட்டும் தொகுதி கூடுகிறது

புதுவை விவகாரம் ஒருபுறமிருக்கையில் தமிழக தொகுதி உடன்பாட்டு பேச்சுவார்த்தையில், தமா.கா.-காங்கிரசுக்கு 25+5 என்று ஆரம்பத்தில் கூறப்பட்டது. மூப்பனார் பேசப் பேச அது 27+5 என்றும், பின்னர் 30+5 என்றும், அதற்கு பின்னர் 35+5, என்றும், இப்போது கடைசியாக 40+5 என்றும் உயர்ந்து கொண்டே வந்திருக்கிறது.

காங்கிரஸ் கட்சியை காட்டி பேச்சுவார்த்தையை இழுத்தடித்து த.மா.கா.வுக்கு அதிக சீட்டுகளை கேட்டு பேரம் நடத்தியிருக்கிறார்கள். ஆனால் கடைசி வரையில் காங்கிரசுக்கு மட்டும் 5 சீட் என்ற நிலையிலேயே இருந்திருக்கிறது. இது தான் காங்கிரஸ் மேலிடத்திற்கு சந்தேகம் ஏற்படுவதற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது.



ஆப்கானில் புத்தர் சிலைகள் தகர்க்கப்படுவதை கண்டித்து கொல்கத்தாவில் புத்த மதத்தினர் தொடர்ந்து ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர்.

## த.மா.கா. சிபாரிசு

த.மா.கா.வுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 40 சீட்டுகளிலிருந்து 2 அல்லது 3 தொகுதிகளை காங்கிரசுக்கு தருகிறோம். இங்கே அதி.மு.க.-பா.ம.க.வுடன் சேர்ந்தே கூட்டணியில் இருப்போம். புதுவையில் காங்கிரஸ், தமா.கா. முடிந்தால் கம்யூனிஸ்டு கட்சிகள் சேர்ந்து தனிக்கூட்டணி வைத்துக் கொள்வோம் என்று காங்கிரஸ் கட்சி மேலிடத்திற்கு மூப்பனார் சிபாரிசு செய்திருக்கிறார். இது ஜெயலலிதா அவரது வசதிக்காக தெரிவித்த யோசனை. மூப்பனாரும் த.மா.கா.வின் நலனுக்காக இதனை ஏற்கலாம் என்று காங்கிரசிடம் சிபாரிசு செய்திருக்கிறார்.

ஆனால், காங்கிரஸ் மேலிடம் இதனை நிராகரித்துவிட்டது. ஜெயலலிதாவுக்கும், மூப்பனாருக்கும் வசதியாக இருக்கும் இந்த ஆலோசனை சூழ்ச்சிகரமானது. மற்ற தோழமைக் கட்சிகளுக்கும் வசதியாகவே இருக்கும் என கருதிவிடக் கூடாது என்று சொல்லி, இதனை காங்கிரஸ் மேலிடம் நிராகரித்து விட்டது.

# உலக வலம்

தொகுப்பு :- பௌஸி

## காங்கிரஸ் உறுதி

பா.ம.க.வை சீண்டுவதில்லை, அதனுடன் உறவு வைத்துக் கொள்வதில்லை என்பதில் காங்கிரஸ் மேலிடம் உறுதியாகவிருக்கிறது. இது ராஜீவ் குடும்பத்தினரின் உணர்வு சம்பந்தப்பட்ட பிரச்சினையாகி விட்டது. எனவே, பா.ம.க. இருக்கும் அணியில் அதுவும் புதுவையை விட்டுக் கொடுத்தமையும் அணியில் இடம்பெறுவதில்லை என்று காங்கிரஸ் முடிவெடுத்து விட்டது.

ஆனாலும் காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து செயல்படுவோம் என்று அறிவித்த மூப்பனார், முதலில் முடிவை அறிவிக்கட்டும் என்று காங்கிரஸ் காத்திருக்கிறது. காங்கிரசை காட்டி த.மா.கா.வுக்கு 40 சீட்டுகளை பெற்றுக் கொண்ட மூப்பனார், காங்கிரசை கை கழுவ காரணத்தை தேடிக் கொண்டிருக்கிறார் என்ற சந்தேகம் சோனியாவுக்கும், இதர காங்கிரஸ் தலைவர்களுக்கும் வந்திருக்கிறது.

டெல்லியில் தொடர்பு கொண்டு அதிகாரப்பூர்வமற்ற முறையில் காங்கிரஸ் நிர்வாகிகளுடன் பேசிக்கொண்டிருக்கும் த.மா.கா.வின் முன்னணி தலைவர் ஒருவரிடமே காங்கிரஸ் நிர்வாகிகள் இந்த சந்தேகத்தை தெரிவித்திருக்கிறார்கள்.

# புத்தர் சிலை உடைப்பு தலிபான் அரசுக்கு ஐ.நா.கண்டனம்

(ஐக்கிய நாடுகள்)

புத்தர்சிலைகளை உடைக்க முயலும் தலிபான் அரசின் நடவடிக்கையை ஐக்கிய நாடுகள் சபை கண்டித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் நாட்டு தலைநகரம் காபூலுக்கு வடக்கே பாமியான் பகுதியில் பழமை வாய்ந்த 2 புத்தர்சிலைகள் உள்ளன.

இஸ்லாம் மதம் சிலை வழிபாட்டை ஆதரிக்கவில்லை என்பதால் இந்த புத்தர்சிலைகளை இடித்து தகர்த்துவிட அந்த நாட்டை ஆளும் தலிபான் அரசு திட்டமிட்டு வருகிறது.

## ஐ.நா. கண்டனம்

தலிபான் அரசின் இந்த காட்டுமிராண்டித்தனத்தை ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சில் நேற்று கண்டித்தது. கவுன்சிலின் தலைவரும் தூதருமான விளாடிமீர் யு பெல்செங்கோ இதுபற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தலிபான் அரசு புத்தர்சிலைகளை நாசப்படுத்த தொடங்கி விட்டதாக செய்திகள் வந்துள்ளன. முழுக்க முழுக்க அவற்றை அழித்து விட்டதாக செய்திகள் வரவில்லை.

## நம்பிக்கை இழக்கவில்லை

புத்தர்சிலைகளை அழிக்க நினைக்கும் தலிபான் அரசின் எண்ணம் தவறான எண்ணம் ஆகும். இதனால் விபரீதங்கள் ஏற்படும். ஆப்கானிஸ்தானில் உள்ள முஸ்லிம் மதத்தை சாராத ஆலயங்கள், சிலைகள், நினைவுச் சின்னங்களை அழிக்கும் வேலையை தலிபான் அரசு உடனே கைவிட வேண்டும்.

தலிபான் அரசின் இந்த நடவடிக்கை உலகம் முழுவதும் உள்ள கலாசார சின்னங்கள் மீது போர் தொடுக்கும் செயல் ஆகும். கலாசார சின்னங்களுக்கு இதனால் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

## அமெரிக்க மியூசியம்

இதனிடையே தலிபான் அரசு அனுமதி தந்தால் பாமியானில் உள்ள பழங்கால புத்தர் சிலையை சொந்தச் செலவில் பெயர்த்து எடுத்து வரத்தயார் என்று அமெரிக்காவில் நியூயார்க் நகரில் உள்ள அரும் பொருட்காட்சியகம் (மியூசியம்) அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக தலிபான் அரசுக்கு அரும் பொருட்காட்சி நிர்வாக அதிகாரிகள் கடிதம் எழுதியுள்ளனர். ஆனால் தலிபான் அரசு அதற்கு பதில் தரமறுக்கிறது.

ஆப்கானிஸ்தான் நாட்டில் தற்போது 90 சதவீத பகுதி தலிபான் அரசிடம் உள்ளது. எஞ்சிய 10 சதவீதம் பகுதி அரசு எதிர்ப்பு போராளிக்குழுக்களிடம் உள்ளது. தலிபான் அரசு, அதன் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து சிலைகள் மற்றும் நினைவுச்சின்னங்களை தகர்த்து வருகிறது.

பாமியான் புத்தர்சிலைகளை முதலில் தகர்க்கத் தொடங்கிய தலிபான் அரசு பக்ரீத் பண்டிகை காரணமாக இந்தப் பணியை நிறுத்திவைத்திருக்கிறது. பக்ரீத்துக்கு பிறகு இந்த சிலைகளை உடைத்து எறிவோம் என்று பாகிஸ்தானுக்கான ஆப்கன் நாட்டு தூதர் அப்துல் சலீம் சாகேப் கூறியுள்ளார்.



குஜாத் பூகம்பத்துக்கு நிதி சேகரிக்கும் நோக்கில் மும்பையில் பிரபல பாடகி லதா மங்கேஷ்கரின் பிரமாண்ட இசை நிகழ்ச்சி நடந்தது. அதில் லதா மங்கேஷ்கர், நடிகர் அமிதாப் பச்சன், சிவசேனா தலைவர் பால்தாக்கரே, கிரிக்கட் வீரர் டெண்டுல்கர் ஆகியோர் பங்கேற்ற காட்சி.



கிளீவ்லேண்டில் உள்ள ஆலன் தியேட்டரில் 12வது சர்வதேச நாட்டுப்புற கலைகள் திருவிழா நடைபெற்றது. விழாவில் பங்கேற்ற ஒரு பெண் கலைஞர் வைன் நிரப்பப்பட்ட ஏராளமான கோப்பைகளை கீழே விழாமல் தாங்கிப்பிடித்து சாகசம் செய்த காட்சியை படத்தில் காணலாம்.

## திருச்சி யாருக்குமில்லை

சட்டசபை தேர்தலோடு திருச்சி எம்.பி. இடைத்தேர்தலும் நடக்க உள்ளது. வழக்கமாக திருச்சி தொகுதியை அ.தி.மு.க. தோழமை கட்சிகளுக்கே ஒதுக்கி வந்துள்ளது. எனவே த.மா.கா.வுக்கோ, காங்கிரசுக்கோ ஒதுக்கப்படலாம் என்று கருதப்பட்டது. ஆனால் யாருக்கும் இல்லை, அ.தி.மு.க.வே போட்டியிடும் என்ற முடிவுக்கு ஜெயலலிதா வந்துள்ளார்.

## சீனப்பாடசாலையில் வெடி விபத்து

(பீஜிங்)

தென்கிழக்கு சீன மாகாணத்தில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றில் சட்டவிரோதமாக வெடிபொருட்களை உற்பத்தி செய்து வந்த தொழிற்சாலையில் இடம்பெற்ற வெடிவிபத்தில் 41 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 21பேர் காயமடைந்துள்ளனர்.

இதனால் அப்பாடசாலையின் 4 வகுப்புக்கள் முற்றாக சேதமடைந்துள்ளன.

இவ்வெடி விபத்தில் பல சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக சீனாவின் மனித உரிமைக் குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. அத்துடன் இப்பாடசாலை அதிபர் விசேட புலனாய்வு பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

## வாசிகசாலை திறப்பு விழா

(செ.கு)

மட்/முனைக்காட்டைச் சேர்ந்த கணபதிப் பிள்ளை தயா பரசர்மா என்னும் இளைஞரின் தனி முயற்சியின் பயனாக வாசிகசாலையொன்று நிறுவப்பட்டிருக்கிறது.

முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயத்தின் முன்பாக அமைந்துள்ள இவ் வாசிகசாலையின் திறப்புவிழா இன்று வெள்ளிக்கிழமை மு.பகல் 9:00க்கு இடம் பெறும்.

இவ் விழாவுக்கு நூலக உரிமையாளர் சிவஸ்ரீ.க.தயா பரசர்மா தலைமை தாங்குவார்.

நூலகம் பற்றிய சிறப்புரைகளை சிவஸ்ரீ.க. கு. சோதிலிங்கம் குருக்கள், அறநெறிப்பாடசாலை அதிபர் ந.குமாரதாஸ் ஆகியோர் வழங்குவார்கள்.

## பட்டிருப்புப் பாடசாலைக்கு கணனி வசதி

(களுவாஞ்சிக்குடி நிருபர்)

கடந்த வருடம், களுவாஞ்சிக்குடி அபிவிருத்தி சபையின் வேண்டுகோளுக்கிணங்க, முன்னாள் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவின் சிபார்சுக்கு அமைய, பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயத்துக்கு "கைரெக்" கம்பியூட்டர்கள் கிடைக்க அனுமதி கிடைத்துள்ளதாக அபிவிருத்தி சபைத்தலைவர் எஸ். முருகேசு தெரிவித்தார்.

இப் பாடசாலைக்கு கம்பியூட்டர் வழங்கும் படி முன்னாள் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா, முன்னாள் கல்வி அமைச்சர் ரிச்சட்பத்திரணவுக்கு கடிதம் மூலம் சிபார்சு செய்ததாக அபிவிருத்திச் சபைத் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## ஆங்கில தட்டெழுத்து வகுப்பு

(களுவாஞ்சிக்குடி நிருபர்)

களுவாஞ்சிக்குடி கிராமிய தொழிற்பயிற்சி நிலையத்தில், புதிதாக ஆங்கில தட்டெழுத்துப் பாடநெறி கடந்த வாரம் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. விண்ணப்பித்து பயிற்சி நெறிக்குத் தெரிவான 20 மாணவர்களும், அபிவிருத்திச் சபைத் தலைவர் எஸ். முருகேசு, சபை உறுப்பினர்கள், பிராந்திய தொழிற்பயிற்சி நிலைய சிரேஸ்ட போதனாசிரியர் ரீ. வினோதராஜ், பாடநெறி ஆசிரியை, பிரமுகர்கள் ஆகியோர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நிலையத்திற்கு வழங்கப்பட்ட ஒன்பது ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள் மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்பயிற்சி நெறி விரிவுபடுத்தப்படவுள்ளதாக எஸ்.முருகேசு தெரிவித்தார். எதிர்வரும் ஏப்ரல் மாதம் தொடக்கம், மின் இணைப்பு, மோட்டார் சைக்கிள் போன்ற பாடநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பதில் கடமை முகாமையாளர் ரீ.வினோதராஜ் தெரிவித்தார்.

## களுவாஞ்சிகுடி வைத்தியசாலை தரம் உயர்த்தப்பட வேண்டும்

(நமது நிருபர்)

களுவாஞ்சிக்குடி வைத்தியசாலை மாவட்ட வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்ட 1996ம் ஆண்டில் இருந்து இன்று வரை நாளுக்கு நாள் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், இவ் வைத்தியசாலையை ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்தி சகல வசதிகளையும் வழங்க வேண்டும் என உயர் அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுப்பதாக, நலன்புரிச்சங்க செயலாளர் எஸ். பேரின்பநாயகம் தெரிவித்தார்.

1998ம் ஆண்டு தொண்ணூற்றி ஆறாயிரம் நோயாளிகளும், 1999ம் ஆண்டு ஒரு லட்சத்து இருபதாயிரம் நோயாளர்களும் சிகிச்சை பெற்றதாக குறிப்பிட்ட அவர், இவ் வருடம் முதல் இரண்டு மாதங்களில் இத் தொகை இருபத்தி எட்டாயிரம் என்றார்.

## பொன் விழாக் காணும் இராஜேஸ்வரி சண்முகம்

(செகு)

ஒலிபரப்புத் துறையில் பொன் விழாக்காணும் 'வானொலிக்குயில்' திருமதி இராஜேஸ்வரி சண்முகம் அவர்களின் 'காற்றின் சுவடுகள்' நூல் வெளியீடும், பாராட்டு விழாவும் எதிர்வரும் 16ம் திகதி வெள்ளிக்கிழமை கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இவ்விழாவுக்கு பிரதம அதிதிகளாக தொழில் அமைச்சர் அலவி மௌலானா, பாராளுமன்ற உறுப்பினர்களான பி.பி.தேவராஜ், பி.சந்திரசேகரன், மொரீஷியஸ் நாட்டு கௌரவத் தூதுவர் தெ.ஈஸ்வரன், தகவல் ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் ஜனதாச பீரிஷ், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுப் பணிப்பாளர் எரிக் பெர்ணாண்டோ ஆகியோர் கலந்து கொள்ளவிருக்கின்றார்கள்.

விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்தை செல்வி துஷ்யந்தி ஜெயசீலன் பாட, திருமதி வசந்தி சிவக்குமார் வரவேற்புரை நிகழ்த்துவர்.

திருமதி பத்மாவதி பூரணானந்தாவின் ஆசியுரையைத் தொடர்ந்து, பேராசிரியர் கா.சிவத்தம்பி, மீனாட்சி பொன்னுத்துரை, கம்பவாரிதி, இ.ஜெயராஜ், பி.எச்.அப்துல் ஹமீட், ஆகியோர் சிறப்புரை ஆற்றுவார்கள்.

கருத்துரையை பிரபல கவிஞரும், இலங்கை வானொலி அறிவிப்பாளருமான இளையதம்பி தயானந்தா நிகழ்த்துவார்.

இந்நிகழ்வில் 'கொஞ்சம் சிரிங்க' நகைச்சுவை நாடகமும், பேபி அர்ச்சனா பத்மநாதனின் நடனமும், 'பாடும் வானம்பாடிகள்' பாடல்களும் இடம் பெறும்.

## நட்சத்திரப்பலன்........

(8ம் பக்க தொடர்ச்சி)

இரண்டாம் பாதம்:-

அம்சத்தின் ரிஷபச் சுக்கிரன் அமைகிறார். இதனால் சுகமாகவும் வசதியாகவும் வாழவே விரும்புவீர்கள். உடலமைப்பிலும் தனிக்கவர்ச்சி இருக்கும். தனதானிய சம்பத்துக்கள் சேரும். வண்டி வாகன வசதிகள் உண்டாகும். தர்மங்களைச் செய்வதில் ஆர்வம் ஏற்படும். கலைஞானங்களில் ஆர்வமும் ஈடுபாடும் ஏற்படும். பெண்களிடம் மிகுதியான ஆசையும் ஈடுபாடும் சிலருக்கு ஏற்படும்.

மூன்றாம் பாதம்:- அம்சநாதன் மிதுனபுதன் கல்வியிலே ஈடுபாடும் புலமையும் மிகுதியாகும். இந்த வகையான திறமை பயன்படும் பதவிகளில் சிறப்பாக முன்னேறலாம். எவரையும் எளிதாக மடக்கியும் வெற்றி காணலாம்.சுகமான வாழ்க்கையும் அமையும். படைத்துறை, காவல் துறையிலும் நல்ல புகழ் பெறலாம்.

நான்காம் பாதம்:- இந்த பாதத்தில் பிறந்தவர்களிடம் தர்மசிந்தனை மிகுதி. எவருடைய துன்பத்தையும் கண்டால் மனம் இளகிவிடும். உடனே உதவ முயல்வார்கள். பொது தர்மஸ் தானங்களையும், திருக்கோயில் போன்றவற்றையும் இவர்களிடம் நம்பிக்கையோடு ஒப்படைக்கலாம். மிகவும் சிறப்பாக தர்மகாரியங்களைச் செய்து வருவார்கள். சந்திரன் அம்சநாதன் என்பதனால் உதவுகின்ற குணம் நிறையவே இருக்கும். கடவுள் பக்தியும் உண்மையாகப் பெற்றிருப்பார்கள்.

அசுவினி சமநோக்கு நட்ஷத்திரம்.

*பெண்கள் பற்றி செய்தி*

அசுவினியில் பிறந்த பெண்களை காந்தருவ தத்துவத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், வசீகரமான உடலமைப்பைப் பெற்றவர்கள் என்றும் கூறலாம். இவர்கள் இனிமையாகப் பேசுகின்றவர்கள். எப்பொழுதும் சிரித்த முகத்துடன் இருப்பார்கள். இனிமையான குடும்ப வாழ்க்கையை அமைத்து மகிழ்பவர்கள். கொண்டவர்களிடம் பாசமும் பற்றும் மிகுதியாக உடையவர்கள். கணவனையும் தன் பிள்ளைகளையும் பேணிக்காப்பதிலே மகிழ்ச்சி காண்பவர்கள். பலசகோதரிகளுடன் பிறந்தவர்கள் எனவும், சுகங்களை அனுபவிப்பவர்கள் எனவும் நல்லவர்களுடன் நட்புடையவர்கள் எனவும் கூறலாம்.

*சிறப்புச் செய்திகள் சில*

இவர்கள் குதிரையைப் போல் வேகமும், வலிமையும் பெற்றவர்கள். கொஞ்சம் முன் பக்கமாகச் சாய்ந்து நடப்பவர்கள். இராசாளிப் பறவைபோல எதையும் ஒரே வேகத்தில் பாய்ந்து கைப்பற்றிக் கொள்ளும் ஊக்கம் பெற்றவர்கள். உயர்ந்த மனப்பான்மையும் நோக்கமும் கொண்டு வாழ்க்கையை நடத்திச் செல்லக் கூடியவர்கள்.

எந்த நிலையிலும் தமக்கு வரும் ஆபத்தைப் பற்றிக் கூடக் கவலைப்படாமல் பிறருக்கு உதவுகின்றவர்கள். சிலருடன் இரண்டு வகையான மனப்போக்கும் காணப்படும். இரகசிய சாஸ்திரங்களிலும் சக்திகளிலும் ஆர்வமும் ஈடுபாடும் சிலருக்கு இருக்கும்.

*பெயர்களின் முதல் எழுத்துக்கள்*

ஒவ்வொரு நட்சத் திரத்தில் பிறந்தவர்களும் தங்கள் பெயர் அந்த நட்சத்திரத்தோடு இசைவாக இருக்கும் படி அமைத்துக் கொள்வதால், சிறந்த வாழ்வைப் பெறுவதற்கு உதவியாக அமையும். சு-சே-சோ-லா என்னும் இவற்றுள் ஒன்று முதல் எழுத்தாக அமைய வேண்டும். சுந்தரரூபன், செந்தூர் மைந்தன், சொல்லழகன், லாவண்ணியன் போன்று அமைக்கலாம். இந்தப் பெயர்கள் அமைதியைக் கொடுக்கும்

அசுவினியில் பிறந்தவர்களின் சிறப்பு கடுமையாக உழைக்கக் கூடியவர். எடுத்துக் கொண்ட வேலையைச் செய்து முடிக்கும் திறமை உடையவர்.

**சோதிடர்:- வே.தவராசா**

# செய்திச் சுருக்கம்

## ஏப்ரல் 22ல் ஒரு மணிநேரம் நீர் அருந்த வேண்டாம்

ஆனையிறவு வீழ்ச்சியின் போது தண்ணீர் அருந்தாமல் இறந்த படை வீரர்களை நினைவு கூரும் முகமாக எதிர்வரும் ஏப்ரல் மாதம் 22ம் திகதி ஒரு மணிநேரம் தண்ணீர் அருந்தாமல் இருக்கும்படி நாட்டு மக்களை கேட்டுக்கொள்கின்றேன் என்று பிரதி சபாநாயகர் பிரிகேடியர் சரத் முனசிங்க நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் பேசுகையில் வேண்டுகோள் விடுத்தார்.

ஆனையிறவு இராணுவ முகாம் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 22ம் திகதி புலிகளிடம் வீழ்ச்சியடைந்தது. இம் முகாமில் இருப்பவர்களுக்கு குடி தண்ணீர் இயக்கச்சியிலுள்ள கிணறுகளிலிருந்தே பெறப்படுகிறது. ஆனால் குறித்த தினத்தன்று தண்ணீர் முகாமுக்குள் கொண்டுவர முடியாத நிலை ஏற்பட்டதால் பிற்பகல் ஒரு மணிக்கும், முதல் மாலை நான்கு மணிக் குமிடையில் பல படை வீரர்கள் இறந்தார்கள் என்றும் அவர் கூறினார் அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

## இராணுவ வீரர் - காதலி ஒன்றாக தற்கொலை

இராணுவ வீரர் ஒருவரும் அவரது காதலியும் ஒன்றாக இணைந்து தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பலாங்கொடை உலக முடிவுப் பகுதியில் இம் மாதம் 5ம் திகதி இடம் பெற்றுள்ளது.

இருவரும் பொலநறுவைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் இவர்களின் காதலுக்கு இருதரப்புப் பெற்றோரும் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். அதனால் இவர்கள் தற்கொலை செய்து கொண்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

டபிள்யூ.ஜீ.சம்பந்த கருணாநாயக்க, (இராணுவவீரர்) ரொஷாணி மலகாந்தி (காதலி) ஆகியோரே தற்கொலை செய்தவர்களாவர்.

## இன்று பேரியல் அஷ்ரஃப் மட்டக்களப்பு விஜயம்

கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் கிராமிய வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சரும் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவியுமான திருமதி பேரியல் அஷ்ரஃப் மட்டக்களப்புக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவர் அமைச்சராகப் பதவியேற்றதன் பின்பு மட்டக்களப்புக்கு செய்யும் முதலாவது விஜயம் இதுவாகும். இவ் விஜயத்தை அடுத்து சனிக்கிழமை மட்டக்களப்பு செயலகத்தில் அரசாங்க அதிபர் இ.மோனகுருசாமி தலைமையில் மாநாடொன்று நடைபெறவுள்ளது. இதில் அமைச்சர் பேரியல் அஷ்ரப் கலந்து கொண்டு மாவட்டத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி அறியவுள்ளார்.

இம் மாநாட்டில் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதேசச் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். மாவட்டத்தின் அபிவிருத்திக்கு முதற் கட்டமாக இரண்டு மில்லியன் ரூபாவை அமைச்சர் ஒதுக்கியுள்ளதாகவும் தெரியவருகிறது.

## சயனைட் அருந்தி இளைஞன் மரணம்

இளைஞன் ஒருவர் சயனைட் அருந்தி தற்கொலை செய்து கொண்ட சம்பவமொன்று செவ்வாய்க்கிழமை இடம் பெற்றுள்ளது.

மன்னார் வைத்தியசாலை வீதியில் உள்ள வீடொன்றில் விடுதலைப் புலி இயக்க உறுப்பினர் ஒருவர் தங்கியிருப்பதாக இராணுவத்தினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அவ்வீட்டை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இராணுவத்தினர் சுற்றிவளைத்த போது தப்பிச் செல்ல வழியின்றி அவ்விளைஞன் சயனைட் அருந்தி தற்கொலை செய்து கொண்டதாக படைத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

மரணமான இளைஞன் மூதூர் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் அறிவுச் செல்வம் என்ற இயக்கப் பெயருடையவர் எனவும் படையினர் தெரிவித்துள்ளனர்.

## வன்னியில் சிசு மரணங்கள் அதிகரிப்பு

முள்ளியவளை மகப்பேற்று நிலையத்தில் கடந்த இரு மாதத்தில் 54 சிசுக்கள் பிறந்துள்ளன. இதில் 12 சிசுக்கள் இறந்தும் நிறை குறைந்தும் பிறந்துள்ளதாக அறிக்கைகள் தெரிவித்தன:

ஜனவரியில் 28 சிசுக்கள் பிறந்துள்ளன. மூன்று நிறை குறைந்து பிறந்துள்ளன. பெப்ரவரியில் 26 சிசுக்கள் பிறந்துள்ளன. இதில் ஏழு நிறை குறைந்து பிறந்துள்ளதாக அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கின்றது. போதிய போஷாக்கு இன்மையே இவ்வாறான சிசுக்கள் பிறப்பதற்கு காரணமாகும் என வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மட்/சொகுசு பஸ்களில் சாதாரண கட்டணம்

நகரங்களுக்கிடையே நடைபெறும் சொகுசு பஸ் வண்டிகளுக்கான உள்ளூர் கட்டணங்களை நியூ ஈஸ்டன் பஸ் கம்பனி லிமிட்டட்டின் கீழ் இயங்கும் சாலைகள் சாதாரண கட்டணத்துக்கு குறைத்துள்ளன. ஏற்கனவே இக் கட்டணங்கள் சாதாரண கட்டணத்திலும் அரை மடங்கு அதிகமாகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும், பிரயாணிகள் ஏற்கனவே அறவிடப்பட்டு வந்துள்ள கட்டணங்களைக் கருத்திற் கொண்டு இப்பஸ் வண்டிகளில் ஏறுவதற்கு தயங்குவதாக மட்டக்களப்புச் சாலையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். போதியளவு விளம்பரப்படுத்தப்படாமையே இதற்கான காரணமாகக் கூறப்படுகின்றது.

# நவீன சமூகத்தில் ஆண்மேலாதிக்கமும் பெண்களும்................

மனித சமுதாயம் ஆண், பெண் ஆகிய இரண்டு பாலாரை உள்ளடக்கி, பகுத்தறிவு வளத்துடன் தொடர்ச்சியாக இயங்கி வருவதாகும். உயிரினங்கள் வாழ்வதற்கு பிரபஞ்சம் இயற்கையாகவே பலவித நியதிகளைக் கொண்டுள்ளமை யாவரும் அறிந்ததே. அந்த வகையில் மனிதர்களிடத்திலோ அல்லது விலங்குகளிடத்திலோ அவற்றின் பரிணாம வளர்ச்சியினை நோக்குகின்ற போது பெண் இனச் செயற்பாடுகள் அவ்வினங்களின் வளர்ச்சிக்கும், தொடர்ச்சிக்கும், பெருக்கத்திற்கும் முதன்மையாகவே இருந்து வருகின்றது என்பது வரலாறு கண்ட அனுபவ உண்மையாகும். மனித சமுதாய வளர்ச்சிக் கால கட்டத்தில் தாய்வழிச் சமுதாய காலம் என்பது பெண்கள் தலைமையேற்று நடாத்தப்பட்ட சமூக அமைப்பைக் கொண்டது. அந்தக் காலகட்டம் பெண்கள் சமத்துவத்துடனும் சுயாதீனத்துடனும் நடாத்தப்பட்ட காலம். ஆனால் இன்றைய நவீன சமூகத்தில் காணப்படும் ஆண்மேலாதிக்கம், பெண்ணின் இரண்டாம் பட்ச நிலைமைகள் என்பன தாயாட்சிச் சமூகத்தின் துரதிஷ்ட வசமான வரலாற்றுத் தோல்வியின் அடிப்படையில் எழுந்த தந்தையாதிக்க விளைவுகளாகும்.

'பெண்' என்பவள் கருப்பை வளத்தைக் கொண்டு மனித இன மறு உற்பத்தியில் முக்கிய பங்கு வகிப்பவள். கருவளம், குழந்தைப் பேறு, தாய்மை என்பன ஒரு சமூகம் ஒன்றின் தொடர்நிலைக்கு அவசியமானவை ஆனால் பெண்களது பாலியற் பண்பினை வைத்து அவர்களை அடக்கியாள நினைக்கும் ஆண்கள், பெண்களின் குழந்தை பேறும், தாய்மையும் முக்கியமான உழைப்பு என்பதனை உணர மறுத்து விடுகின்றனர். அவ்வாறு உணர்ந்து கொண்டாலும் தமது ஆதிக்க உணர்வினால் பெண்களுக்குரிய சமத்துவ உரிமைகளைக் கொடுக்க மறுத்து விடுகின்றனர்.

இன்றைய நவீன சமூகத்தில் காணப்படும் முக்கிய அம்சமான ஆணாதிக்கம் என்பது குடும்பத்திலும் சரி, சமூகத்திலும் சரி, பெண்ணுக்கு ஏற்படும்

எஸ்.ஜானகி
*கிழக்குப்பல்கலைக்கழகம்*

அனைத்துத் தொல்லைகளுக்கும் அடித்தளமிடுகின்றது. ஒரு பெண்ணானவள் மகளாக, மனைவியாக, தாயாக சமூக உறவுகளை ஏற்படுத்துவதற்கு உரிய பாத்திர உருவாக்கங்கள் ஆணாதிக்கத்தின் அடிப்படையில் நிகழ்த்தப்படுவதால் பெண்களும் அடிமை மனநிலையிலேயே வாழ்வதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். சிறிய குழந்தைகளில் இருந்து வளர்ந்தோர் வரை பெண்ணின் பால்நிலை காரணமாக பெண்களுக்கு பாரபட்சம் வழங்கப்படுகின்றது. சிறிய பெண் பிள்ளைகளுக்கு சட்டி, பானைகளும், ஆண்குழந்தைகளுக்கு கார், பிளேன் போன்ற தொழில்நுட்ப விளையாட்டுப் பொருட்களும் வழங்கப்படுகின்றன. இவ்வாறான சமூகமயப்படுத்தல்கள் குழந்தைகளுக்கு ஏற்படுத்தப்படுவதால் அவற்றின் சமூக உறவுகளில் வேறுபாடுகள் தோன்றுகின்றன. வேலைத் தளங்களில் சில மேலதிகாரிகள் தமக்குக் கீழ் வேலை செய்யும் பெண்களை பாலியற் தொல்லைகளுக்கு உள்ளாக்குகின்றனர். சிலர் தமது பெண் காரியதரிசிகளை தேநீர் அல்லது கோப்பி தயாரிக்கும் படி பணிக்கின்றனர். இவ்வாறான ஆண் மேலாதிக்கங்கள் சமூகத்தால் உருவாக்கப்பட்டவை. ஆகவே இவை மாற்றம் அடையக் கூடியவை கட்டாயமாக மாற வேண்டியவை.

உணவு தயாரித்தல், அல்லது சமைத்தல், குழந்தைகளை வளர்த்தல், அழுக்கு உடைகளைக் கழுவுதல், மற்றும் வீடும் வீடு சார்ந்த சுற்றுச் சூழல் துப்புரவு செய்யும் வேலைகள் உட்பட ஆணுக்குச் சேவை செய்யும் நடைமுறைகள் அனைத்தும் பெண்களுடையவை என்பது எமது சமூக நடைமுறை. இதுவே காலம் காலமாக கற்பிக்கப்படும் கலாச்சாரம் என்று ஆண் சமூகம் பெண்களை இரண்டாம் பட்ச நிலைமைக்குத் தள்ளிவிடுகின்றனர். பெண்களின் ஆளுமை வளர்ச்சி ஆக்கத்திறன் முயற்சிகள், தலைமைத்துவம் ஆகியவற்றுக்கும் எதிராக செயற்பட்டு வருகின்றனர். இவ்வாறே தமிழ்ச் சமூகத்தில் நிலவுகின்ற கற்பு என்ற கோட்பாடும் ஆண் மேலாதிக் கத்தை நிலைநாட்டும் ஆதிக்கக் கோட்பாடாகும். பெண் கணவனை ''கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்'' என்று வாழவேண்டும். கணவன் இறந்த பின்னரோ அல்லது விவாகரத்துக்குப் பின்னரோ மறுமணம் செய்ய முடியாது என்ற சமூக நியதி ஆணின் விடையத்தில் ''பெண்டாட்டி செத்தால் புதுமாப்பிள்ளை'' என கொண்டாடப்படுகின்ற பாரபட்ச நிலையைக் கொண்டுள்ளது. பெண்கள் ஆண்களின் காமப்பசியினால் சீரழிக்கப்படுகின்ற போது கற்பிழந்தவர் என்று பெண்களைத்தான் சமூகம் ஒதுக்கி வைக்கின்றது. எனவே ஆண்களினுடைய பாலியற் பலாத்காரங்களுக்கு உடனடியான பகிரங்க தண்டனை வழங்கினால் தான் பெண்கள் நிம்மதியாக பாலியற் தொல் லைகள் இல்லாத, வாழ்வு வாழமுடியும். பாதிக்கப்பட்ட பெண்கள் தாம் கற்பிழந்தவர் என்று தமக்குத்தாமே குத்திக் கொள்ளும் ஓர் தாழ்வு மனப்பான்மையை நீக்க வேண்டும். கிராமப்புறங்களில் வாழும் பெண்களே கூடுதலான ஆண் மேலாதிக்கத்தினால் அல்லல்ப்படுகின்றவர்கள். எனவே இவற்றைத் தடுக்க அனைத்துப் பெண்களும் முன்வரவேண்டும். பெண்ணுரிமை அமைப்புக்களுடனும், இயக்கங்களுடனும் சேர்ந்து ஒத்துழைப்பை வழங்க வேண்டும். கூடுதலாக மேடைகளில் பெண்ணுரிமை பேசும் ஆண் தனது வீட்டில் அதற்கு எதிர்மாறான நடவடிக்கையைக் கொண்டிருக்கும் சந்தேகத்துக்கு உரியவன். ஒவ்வொரு ஆணின் மனதில்ும் பெண்கள் மீதான ஆதிக்க உணர்வு கனிந்து கொண்டே இருக்கின்றது. இது அவ்வப்போது தீப்பிழம்புகளாக வெளிவந்து அவர்களின் குணங்களை வெளிச்சம் போட்டுக்காட்டி விடுகின்றன. கல்வியோ அல்லது சுற்றுப்புற நாகரீகத் தொடர்புகளோ ஆண்களின் பெண்கள் மீதான எடுத்துக்காட்டாக உயர்கல்வி நிறுவனங்களிலோ அல்லது வேறு ஸ்தாபனங்களிலோ பெண்களால் முன்னெடுத்துச் செல்லப்படும் எந்த நடவடிக்கைகளும் ஆண்களால் கேலிக்கும், கீழ்த்தர விமர்சனத்துக்கும் உள்ளாக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். எனவே பெண்கள் விழிப்படைய வேண்டும். பெண்கள் அபிவிருத்திக்காகப் பாடுபடவேண்டும். ஆண்மேலாதிக்கம் அற்ற சமத்துவ சமூகத்தை உருவாக்க உழைக்கவேண்டும்.

## கருத்தரங்கு

### இது உங்கள் பக்கம்

மீண்டும் கருத்தரங்கு இப்பகுதியில் ஆரம்பமாகியிருக்கிறது. தேர்தலுக்குப் பின் மக்கள் பிரதிநிதிகளிடம் எதிர் பார்க்கும் தேவைகள், அரசியல் நிலைமை நோர்வேயின் சமாதான முயற்சிகள் போன்ற பல விஷயங்களில் வாசக நேயர்கள் தங்கள் கருத்துக்களை இப்பகுதியில் வெளியிட வாய்ப்பளித்திருக்கிறோம். இனி இது உங்கள் பக்கம்.

ஆசிரியர்

# நட்சத்திரப்பலன்

நாம் பிறந்த நட்சத்திரங்களுக்கான பலாபலன்களை ஒரே பார்வையில் அறிந்து கொள்வதற்காக ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் குருக்கள் மடத்தைச் சேர்ந்த சோதிடர் வே.தவராசா எழுதுகிறார். இன்று 'அசுவினி' நட்சத்திரத்திற்கான பலன் இடம் பெறுகிறது. அடுத்த வெள்ளி பரணி நட்சத்திரத்திற்கான பலன் இடம்பெறும்.

## நட்சத்திரப் பலாபலன்
## -அசுவினி-

செய்வினை தெரிந்து செய்யவே யார்க்கு நல்லன் மையறு மணியும் பொன்னும் மகிழ்ச்சியாயணிய வல்லன் பொய்யுரையொன்றுஞ் சொல்லான் புகழ் பெற வாழவல்லனைய மிட்டுண்ண வல்லனசுவினி நாளி நானே. மேஷராசியில் 1முதல் 13-20பாகைக்குள் அமைந்திருப்பது அசுவினி நட்சத்திரமாகும்.

இதில் சந்திரன் இருக்கும் போது பிறந்தவர்கள் நீங்கள்.

அசுவினிக்குரிய கேதுவும், சந்திரனும், மேஷத்திற்குரிய செவ்வாயும் சேர்ந்து உங்கள் உலக வாழ்வை உருவாக்கி நடத்துவார்கள்.

*பொதுவான தன்மைகள்*

உங்களுக்குச் சுயமாகச் செயல்படும் ஆற்றல் மிகுதியாயிருக்கும். ஆண்மைக் குணமும் அதிகமாகக் காணப்படும் இவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

புத்திக் கூர்மை மிகுதி எதைச் செய்ய நினைத்தாலும் அதைத் தீவிரமாக முயன்று செய்து விடும் மனவூக்கம் பெற்றவர்கள். மற்றவர்கள் அலட்சியப் படுத்தினாலும் அதிகாரம் செய்தாலும் உங்களால் தாங்க முடியாது. தோல்விகளில் சோர்வு அடைந்தாலும், விரைவில் வேறொரு முயற்சியில் தீவிரமாக இறங்கி விடுவீர்கள். பலபேரும் பாராட்டும் படியாக வாழவேண்டும் என்ற ஆசை உடையவர்கள். இதனால் உங்களைப் புகழ்ந்து பாராட்டி ஏமாற்றும் குணமுள்ள பலர் உங்கள் நெருங்கிய நண்பர்கள் போல் நடிப்பார்கள். நண்பரால் ஏமாறும் அனுபவம் அடிக்கடி உங்களுக்கு ஏற்படும். நண்பர்கள் செய்யும் துரோகத்தை உங்களால் தாங்க முடியாது வேதனைப்பட்டு வருந்துவீர்கள்.

புத்திக்கூர்மையையும் சக்தியையும் பயன்படுத்தக்கூடிய எல்லா முயற்சிகளும் உங்களுக்கு மிகவும் பிடிக்கும். எதையும் நினைத்ததும் உடனே செய்து முடித்து விடவும் நினைப்பீர்கள்.

வாளிப்பான உடலும் வலிமையான ஆற்றலும் பெற்றவர்கள். கூர்மையான மூக்கும் விசாலமான கண்களும் கொண்டவர்கள். எவரையும் கவரக்கூடியவர்கள். இதனால் பெண்களிடம் உங்களிற் சிலர் மயங்கி ஏமாறவும் நேர்வதுண்டு.

உங்களுக்கு கண் நோய் அடிக்கடி வரலாம். இவற்றைச் சகித்துக் கொள்வீர்கள். தலைவலி, பல்வலியும் ஏற்படப்பலன்.

பரந்தமார்பும், நீண்டு அகன்ற நெற்றியும், சிவந்த கண்களும் பெற்றவர்கள். உங்களிற் பலருக்கு இடுப்புப் பகுதியில் மறு, மச்சம் இருக்கும். சிலருக்கு தலைப்பகுதியில் தளிம்புகள் காணப்படுவதும் உண்டு.

உங்களால் திறமையாகப் பொய் சொல்ல முடியாது. மனதிலே பட்டதை வெளிப்படையாகச் சொல்லி விடுவீர்கள். இதனால் மற்றவர்கள் வருந்துவது பற்றியோ, உங்களை வெறுப்பது பற்றியோ கவலைப் படவும் மாட்டீர்கள்.

நிறையச் சம்பாதிப்பீர்கள். தேவையற்ற வீண் செலவுகளையும் மிகுதியாகச் செய்துவிடுவீர்கள். இதனால் எப்போதும் பணத்தட்டுப்பாடு உங்களுக்கு ஏற்படும்.

நியாயத்துக்குப் போராடத் துணிவீர்கள் அநியாயம் என்று தோன்றினால், உடனே அங்கேயே எதிர்த்து நிற்பீர்கள். பின்விளைவுகளைப் பற்றி எல்லாம் நினைக்க மாட்டீர்கள். கோபம் சற்று அதிகம். ஆனால் கோபத்துக்கு உள்ளானவர்கள். தவறு செய்தவர்கள் உங்களிடம் வந்து மன்னிப்பு கேட்டால் உடனேயே மன்னித்து விடுவீர்கள்.

வேகமாகச் செல்வதும், செய்வதும் உங்களுக்குப் பிடித்தமானவை. சுய கௌரவமும் மிக அதிகம். மந்தமான தொழிலும் வாழ்க்கையும் உங்களுக்கு சிறிதும் ஒத்துவராதவை.

அசுவினியில் ருதுவாகும் பெண்கள் தனதானிய சந்தான பாக்கியம் பெற்றும், புண்ணியங்களைச் செய்தும் புகளோடு வாழ்வார்கள்.

*நான்கு பாதங்கள்*

முதலாம் பாதம்:- முதல் பாதத்தில் பிறந்தவர்களிடம் மேஷச்செவ்வாயின் அம்சம் மிகுதியாக இருக்கும். புத்திக் கூர்மை குறுக்கு வழியிலே அடிக்கடி செல்லும், விரைவாகச் சம்பாதித்து விடவேண்டும் என்ற மனவேகமும் அதிகம். சுகபோக விருப்பமும் அதிகம் சொந்த முயற்சியினாலேயே படிப்படியாக வசதிகளைத் தேடிக் கொள்வீர்கள். சண்டைக்குணமும், பிறரைப் பற்றிக் குறைபேசும் குணமும் சிலரிடம் காணப்படும். போக இச்சையால் கெட்ட சகவாசங்களிலும் சிலர்

(5ம் பக்கம் பார்க்க)




# அவுஸ்திரேலியா மீது புலனாய்வுக் கண்ணோட்டம்

(பிரகாஸ்)

தொடர் வெற்றிகளைக் குவித்துவரும் அவுஸ்திரேலிய அணி மீது இந்திய மத்திய புலனாய்வு ஆழ்ந்து அக்கறை காட்டிவருவது இங்கு குறிப்பிடத்தக்கது. இறுதியாக இந்திய அணிக்கும், அவுஸ்திரேலிய அணிக்கும் இடையிலான டெஸ்ட் போட்டிகளில் 10 விக்கட்டுக்களால் அபாரமான வெற்றியைக் குவித்தது நாம் அறிந்ததே. இதனையடுத்தே இந்திய மத்திய புலனாய்வு இதற்குள்ளும் சூதாட்டம் ஊடுருவியிருக்கலாம் என சந்தேகத்தை எழுப்பியுள்ளது. இப்படித்தான் எந்தவொரு அணியும் தொடர் வெற்றிகளை தம் வசமாக்கிக் கொள்கிறதோ அந்த அணிகளுக்கிடையே சூதாட்டக்காரர்கள் எழும்புவது வழமையான விடயம் தான். எனவே, இந்தப் போட்டிகளிலும் சூதாட்டம் நிகழ்ந்திருக்கலாம் என சந்தேகிக்கின்றது இந்திய மத்திய புலனாய்வு.

போட்டிகளிலிருந்து சூதாட்டம் தொடர்பாக நீக்கப்பட்ட வீரர்கள். தமக்கு வருமானம் தேடி இத்தகையதோர் எழிய செயலில் இறங்கியிருக்கக்கூடும். காரணம் அவ்வாறே தென்னாபிரிக்காவின் தொடர் வெற்றிகளும் அமைந்தன என்று புலனாய்வு கருத்து வெளியிட்டுள்ளது.

காலத்துக்குக் காலம் கிரிக்கெட் வீரர்கள் தங்கள் சம்பாத்தியத்தை வலுப்படுத்தியே இந்தச் சூதாட்டப் பின்னலில் இறங்கியிருப்பது இதற்கு முன்னர் நடைபெற்ற போட்டிகளும் போட்டிகளில் ஆடிய சூதாட்டங்களும் எடுத்துக்காட்டாக அமைகின்றது.

பலநாள் கள்வர் ஒருநாள் அகப்படுவான் என்பதற்கிணங்க, இன்னும் நடைபெறும் போட்டிகள் எமக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமையும் என்றார். இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த விசேட அதிகாரி ஒருவர். பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். எந்த அளவில் கிரிக்கெட் சூதாட்டம்" நடைபெறப்போகின்றது என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.



அண்மையில் இடம் பெற்ற மாவடிப்பள்ளி அல் அஷ்ரப் மகா வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டியில் இடம் பெற்ற மாணவிகளின் உடற்பயிற்சிக் காட்சியை படத்தில் காணலாம்.

## சலகதுறை ஆட்டக்காரர் இருந்தும் ஏன் பாக்கிஸ்தான் அணி தோற்கிறது?

### ஆய்வாளர் கருத்து

(பிரகாஸ்)

கடந்த வாரத்தில் நியூசிலாந்து அணிக்கும், பாக்கிஸ்தான் அணிக்கும் இடையே நடைபெற்ற போட்டி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பாக்கிஸ்தான் அணியின் முன்னணி வீரர்கள் எவருமே சிறப்பாக ஆடவில்லை.

அடுத்து, பந்துவீச்சாளரைப் பொறுத்தமட்டில் வசிம் அக்ரமோ, சொயிப் அக்தரோ சிறப்பாக செயல்படவில்லை என்பதும் ஆய்வாளர்களின் முக்கிய கருத்து. அதன்படி நாம் பார்க்கும் போது மக்மிலன் நியூசிலாந்து அணிக்காக ஏனைய போட்டிகளில் சிறப்பாக ஆடவில்லை என்பது முக்கிய எடுத்துக்காட்டாகும். நியூசிலாந்துடனான இரு போட்டிகளிலும் கோட்டைவிட்டதே எமக்கு சந்தேகத்தை வலுப்படுத்துகிறது என்பது ஆய்வாளரது கருத்து.

## விளையாட்டுப் போட்டி முடிவுகள்

(மண்முனைப்பற்று நிருபர்)

மண் முனைப் பற்றுப் பிரிவில் கழகங்களுக்கு இடையிலான பல குழு விளையாட்டு நிகழ்ச்சியில் ஆரையம்பதி, புதுக்குடியிருப்பு ஆகிய இரு கிராமங்களில் உள்ள விளையாட்டுக் கழகங்கள் வெற்றியீட்டின.

எல்லே- ஆண்- ஆரையம்பதி ஏசியன் விளையாட்டுக் கழகம்.

எல்லே- பெண்- புதுக்குடியிருப்பு டொல்பின் விளையாட்டுக்கழகம்

கபடி:- ஆண்- புதுக்குடியிருப்பு டொல்பின் வி.கழகம்

கபடி:- பெண்- புதுக்குடியிருப்பு டொல்பின் வி.கழகம்

கரப்பந்து:- பெண்- புதுக்குடியிருப்பு டொல்பின் வி.கழகம்

கரப்பந்து:- ஆண்- ஆரையம்பதி ஏசியன் வி.கழகம்.

கிரிக்கெட்:- ஆண்- ஆரையம்பதி

உதைபந்து:- ஆண் ஆரையம்பதி



மட்/சிவானந்தா மகா வித்தியாலயத்தில் இடம் பெற்ற விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர் ஒருவருக்கு செல்வராசா எம்.பி.பரிசு வழங்குவதைப் படத்தில் காணலாம்.





கல்லடி விவேகானந்தா மகளிர் மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு பரிசு பெற்ற மாணவிக்கு மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் பரிசளிப்பதை முதலாவது படத்திலும், விளையாட்டுத் திடலில் குழுமியிருக்கும் மாணவிகளின் ஒரு பகுதியினரை இரண்டாவது படத்திலும் காணலாம்

# வாசகர் நெஞ்சம்

## தைபிறந்தும் வழிபிறக்கவில்லையே!

## தொண்டர் ஆசிரியர் கவலை

தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றியவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் என தொண்டர் ஆசிரியர் சங்கங்கள் மேற்கொண்ட சாத்வீகப் போராட்டங்களினாலும் அரசியல் முக்கியஸ்தர்களின் அழுத்தங்களினாலும் ஒரு தொகைத் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது வழங்கப்பட்ட நியமனங்களின் எண்ணிக்கை தொண்டர் ஆசிரியர்களின் எண்ணிக்கையோடு ஒப்பிடுமிடத்து தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமன இலக்கை பூர்த்தி செய்வதாக அமையாத காரணத்தால் தொண்டராசிரியர்கள் தமது நிரந்தர நியமனக் கோரிக்கையை முன்வைத்து மீண்டும் உண்ணாவிரதப் போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபடத் தொடங்கினர். இதன் விளைவாக தொண்டராசிரியர்களின் நிரந்தர நியமனத்திற்கு வழி சமைக்கும் வகையில் கௌரவ அமைச்சர் டக்ளஸ். தேவானந்தா அவர்கள் தலையீட்டினால் சென்ற வருட இறுதியில் கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த அவர்களுடனான உயர் மாநாட்டுக்கு வடக்கு, கிழக்கு தொண்டராசிரியர் சங்கப் பிரதிநிதிகள் பங்குபற்றவும் ஏற்பாடு செய்திருந்தார். அந்த மாநாட்டின் பெறுபேறுகளின் படி 1500 தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதாக கல்வி அமைச்சர் உறுதியளித்திருந்தார். அவற்றுக்கான அமைச்சரவை, திறைசேரி அங்கிகாரம் பெறும் பொருட்டு ஒரு மாதகால அவகாசமும் கேட்டிருந்தார். இதன் காரணமாக நிரந்தர நியமனம் கிடைக்கும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க கைவிடப்பட்டது. ''தைபிறந்தால் வழிபிறக்கும்" என்ற கூற்றுக்கு அமைய தை மாதமளவில் நியமனம் வழங்கப்படும் என அமைச்சர் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது தற்பொழுது மார்ச் மாதமாகியும் நியமனம் வழங்கப்படாதது தொண்டர் ஆசிரியர்களுக்கு கவலை அளிப்பதாக உள்ளது. நியமனத்தையே எதிர்பார்த்து வேறு எந்தவொரு தொழிலுக்கும் முயற்சிக்காமல் காத்திருக்கும் தொண்டராசிரியர்களின் நியமனம் குறித்து மட்டக்களப்பு மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கத் தலைவர் சா.சுதாகரன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் தொடர்பு கொண்டு கேட்டபொழுது அதற்கான முழுப்பிரயத்தனமும் தான் மேற்கொள்வதாகவும் எதிர்வரும் 12ம் திகதி அளவில் நல்ல செய்தியைத் தெரிவிப்பதாகவும் கூறியுள்ளார்.

நிரந்தர நியமனத்திற்கு முற்றுமுழுதான அழுத்தத்தைக் கொடுக்கவும், விரைவாக அதைப்பெறும் நோக்கிலும் 12ம் திகதி திங்கள் காலை 10 மணிக்கு சகல தொண்டர் ஆசிரியர்களையும் மட்டக்களப்பு மாவட்டக் கல்வித் திணைக்களத்துக்கு முன்பாக ஒன்று கூடும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

**தலைவர். சுதாகரன்**
**செயலாளர்:- என்.குருச்சந்திரராஜா**
**பொருளாளர்:- ஜீ.ஜெயசீலன்**

## மண் அகழ்வைத் தடுக்க வேண்டும்!

கொக்குவில் பனிச்சையடிக் கிராமம் மிகவும் பிற்கோக்கான நிலையிலுள்ளது என்பதுடன் இங்கு கல்வியின் தரம் மிகவும் குறைவான நிலையில் உள்ளது. மிதமாகச் சொன்னால் இங்குள்ள மக்கள் பாமர மக்களே.

அன்றாட உணவுக்காக வீட்டுத்தோட்டச் செய்கையும் மட்டக்களப்பு வாவியில் கரைவீச்சுப் பிழைப்பையும் நம்பி வாழ்கின்ற மக்கள் தான் மிகச் செறிவு.

இப்படியான கிராமத்தில் சில விசயங்களுக்கு பக்கபலமாக சில அரசாங்க அதிகாரிகளும் உடந்தையாக இருப்பது வேதனைக்கும் விந்தைக்குமுரியதாகும். இச் செயல் எதிர்காலத்தில் எமது கிராமத்தையும் இளஞ்சிறார்களையும் பாதிக்கும் என்பதில் ஐயமில்லை.

தங்கள் சபைக்குரிய வட்டாரத்தில் அமைந்திருக்கும் கிராமத்தில் இப்படியொரு அனாவசியமான வேலையும் பிற்போக்கான வேலையும் நடைபெறுவதைத் தாங்கள் நிறுத்துவீர்கள் என்பது எங்களது அசைக்க முடியாத நம்பிக்கை. மட்/மாநகர சபைக்குத் தங்களின் பதவியேற்புக் காலத்தின் பின் இது போன்ற சில செய்கைகள் நிறுத்தப்பட்டுள்ளதுடன் அபிவிருத்தித் திட்டங்களும் பாராட்டுக்குரியன.

எனவே, ஐயா தாங்கள் தயவு செய்து இந்த அனர்த்தத்தை நிறுத்துவதற்குத் தங்களால் இயன்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனப் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அடுச்து இதனை நிறுத்துவதற்கு " இவ்வட்டாரத்தில் மண்ண கற்றுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. இதனை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்" என்ற சுலோகத்தினை எழுதிய மூன்று பெயர்ப் பலகைகள் தயாரித்து வழங்கும்படியும் இவற்றினை இடுவதற்கான பொருத்தமான இடங்களுக்கு மதிப்பும் காட்டுவோம் என்பதையும் உத்தரவாதத்துடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**தலைவர்:- ஏ.குருநாதப்பிள்ளை**
**காரியதரிசி:- என்.நாராயணப்பிள்ளை**
**கொக்குவில் கிராம அபிவிருத்திச் சங்கம்**

# "அரசே போரை உடன் நிறுத்து" தடாகம் மகளிர் தின நிகழ்வில் கோரிக்கை

(நமது நிருபர்)

**கோரகல்லிமடுவிலுள்ள தடாகம் கிராமிய அபிவிருத்தி நிறுவனத்தில், சர்வதேச மகளிர்தினத்தையொட்டி எழுச்சி நிகழ்வொன்று நேற்று நடாத்தப்பட்டது.**

**தடாகம் நிறுவன இணைப்பாளர் தலைமையில், கோரளைப்பற்று பெண்கள் அபிவிருத்தி நிறுவனத்தினால் இந்நிகழ்வு ஒழுங்கு படுத்தப்பட்டு நடாத்தப்பட்டது.**




**தடாகம் நிறுவனத்தில் நேற்று நடை பெற்ற சர்வதேச மகளிர்தின நிகழ்வில், தடாகம் நிறுவன இணைப்பாளர் செல்வி து.சந்திரா உரை நிகழ்த்துவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட மக்களின் ஒரு பகுதியினரையும் இங்கு காணலாம்.**

தடாகம் நிறுவன வளாகத்தினுள் நடாத்தப்பட்ட மேற்படி நிகழ்வில், கிண்ணையடி, பாலையடித்தோணா, நாசிவன் தீவு, மயிலங்கரைச்சி, சந்திவெளி, போன்ற பல்வேறு கிராமங்களிலுமிருந்தும் நூற்றுக்கணக்கான மக்கள் வந்து கலந்துகொண்டனர்.

நிகழ்வையொட்டி, தடாகம் நிறுவனம் அமைந்துள்ள வளாகம் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளாலும் வர்ணமாலைகளாலும் அலங்கரிக்கப் பட்டிருந்தது.

இப்பதாதைகளில், பிரதானமாக,
'அரசே போரை உடனடியாக நிறுத்து'
'போர் என்ற பெயரில் பெண்ணினத்தை வதைக்காதே'
'எமது அபிலாஷை சுயநிர்ணய உரிமையே'
'வடக்கு கிழக்கு தமிழர்களுடைய தாயகம்'
'சுதந்திரத்திற்கு அவாவும் தேசத்தில் சீதனம் வேண்டாம்'

போன்ற வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன. நிகழ்வில் கலந்துகொண்ட பலரும் பெண்கள் அன்றாட வாழ்வில் எதிர்நோக்கும் பிரச்சனைகள் சர்வதேச மகளிர் தினத்தின் நோக்கம், பெண் உரிமை என்பது என்ன? என்பவற்றை விளக்கி உரை நிகழ்த்தினர்.

## பேரியல் காத்தான் குடி வருகிறார்

(எஸ்.பௌஸியா)

கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு கிராமிய வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சரும் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவியுமான திருமதி பேரியல் அஷ்ரப் இன்று காத்தான் குடிக்கு விஜயம் செய்கிறார்.

இவர் காங்கேயனோடை ஹிஸ்புல்லாஹ் வித்தியாலயத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் அதிதியாக கலந்து சிறப்பிப்பார்.இதேவேளை நாளை சனிக்கிழமை மட்டக்களப்பு செயலகத்தில் அரசாங்க அதிபர் இ.மோனகுருசாமி தலைமையில் நடைபெறும் மாநாடு ஒன்றிலும் கலந்துகொண்டு மாவட்டத்தின் அபிவிருத்தி பற்றி ஆராயவுள்ளார்.

## போர் முடிவு...

சிறு தோட்டத்துறை போன்றவற்றிக்கு முக்கிய இடம் வழங்கப்படும். அத்துடன் பெரும்பாலான துறைகளுக்கு தனியாரின் முதலீடு பெறப்படும் நாட்டில் சமாதானம் ஏற்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இடம்பெயர்ந்தவர்கள் மீழக் குடியமர நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

மீளக்குடியமர்த்துவதற்கு 750 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதே வேளை இலங்கையை உல்லசத்துறை மையமாக்கி உல்லாசத்துறையை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

**பாதுகாப்பு நிதி அதிகரிப்பு**

பாதுகாப்பு நிதி கடந்த ஆண்டைவிட 75 பில்லியனாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பாதுகாப்பு வரி 7.5 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் அரசாங்கம் 6100 மில்லியன் ரூபாவை பாதுகாப்பு வரி மூலம் வருமானமாக எதிர்பார்க்கிறது. நிர்வாக செலவைகட்டுப்படுத்தும் வகையில் அரசாங்க வெளியீடுகள் மற்றும் சகல பதிவுகளுக்கான கட்டணங்கள் 15 வீதத்தால் அதிகரிககப்படும்.

**வதிவிட விசா வரி**

வெளிநாட்டு தூதரங்களில் கடமையாற்றுபவர்கள் தவிர ஏனய வெளிநாட்டவர்களுக்கான வதிவிட விசாவரி 5000 ரூபாவினால் அதிகரிப்பு செய்யப்படவுள்ளது பிரஜாவுரி மைக்கட்டணமும் அதிகரிக்கப்படும்.

இதன் மூலம் 200 மில்லியன் ரூபா வருமானமாக எதிர்பார்க்கப்படுகிறது. விமான நிலையத்தில் இருந்து நாட்டை விட்டு செல்வோரிடம் அறவிடப்படும் வரி 500 ரூபாவில் இருந்து 1000 ரூபாவாக அதிகரிக்கப்படும்,

## பாதுகாப்பு.........

க்கழக அனுமதி கிடைத்தால் வழங்கப்படுகின்ற நிதி 25 ஆயிரத்தில் இருந்து 30 ஆயிரமாக அதிகரிக்கப்படும்.

**புலமைப்பரிசில் நிதி அதிகரிப்பு**

ஆரம்பப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைவோருக்காள நிதி 10 ஆயிரத்தில் இருந்து 15 ஆயிரமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்கு செல்வோருக்கான வரியினை வெளிநாட்டு வேலை வாய்பு பணியகமே மேற்கொள்ளும்.

அரசாங்க ஊழியர்கள், வங்கி ஊழியர்கள், வர்த்தக ஊழியர்களுக்கு தனியான விடுமுறைத்திட்டம்.

இதற்கமைய அனைத்து துறையினருக்கும் சீரான விடுமுறை வழங்கப்படும்.

**தொடர்ந்து விசேட அலவன்ஸ்**

கடந்தவருடம் ஆகஸ்ட் மாதம் தொடக்கம் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் விசேட அலவன்ஸ் தொடர்ந்து வழங்கப்படும், இதே வேளை அரசாங்க ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு சம்பள ஆணைக்குழுவின் அடிப்படையில் அடுத்த வருட வரவு செலவுத்திட்டத்தில் இருந்தே அதிகரிக்கப்படும்.

**வீடமைப்பு வசதி**

அரசாங்க ஊழியர்களுக்கு நகரப்பகுதி வீடமைப்பு திட்டங்கள் ஏற்படுத்தப்படும் அவர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் திட்டம். அரச செலவில் மருத்துவ உதவி, ஓய்வுபெறுவோருக்கு விசேட கடன் திட்டம் என்பன ஏற்படுத்தப்படும்.

## பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண அமெரிக்கா உதவவேண்டும்

(நமது நிருபர்)

விடுதலைப்புலிகளை பயங்கரவாத இயக்கம் என்று நீங்கள் சொல்வதானால் இலங்கை அரசாங்கமும் பயங்கரவாத அரசுதான் என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று யாழ் பல்கலைக்கழக பிரதிநிதிகள் இலங்கைக்கான அமெரிக்கத்தூதர் திரு. ஆஸ்லி வில்ஸ் அவர்களிடம் தெரிவித்துள்ளனர். புதன்கிழமை பிற்பகல் அமெரிக்கத் தூதர் திரு.வில்ஸ் யாழ்ப்பாணத்தில் உள்ள யு.என்டி.பி அலுவலகத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகத்தின் பிரதிநிதிகளைச் சந்தித்தார்

விடுதலைப்புலிகள் மீதான தடையை அமெரிக்கா நீக்க வேண்டும். இலங்கை அரசும் விடுதலைப் புலிகள் இயக்கமும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணுவதற்கு அமெரிக்கா உதவவேண்டும் என கேட்டுக் கொண்டனர்

ஒலி ஒளி பரப்பு வான் அலை வரிசைகளுக்கான கட்டணம் 100 சதவீதத்தால் அதிகரிக்கப்படும் இதே வேளை தீர்வையற்ற வாகன வரி ரத்து செய்யப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் அரசாங்க ஊழியர்களுக்கான தீர்வையற்ற வாகன அனுமதி முற்றாக இடை நிறுத்தப்பட்டுள்ளது.

அமைச்சர்கள், பிரதியமைச்சர்களுக்கான ஊழியர், தொலைபேசி, எரிபொருள், மின்கட்டணம், கட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

அர்சாங்க திணைக்களங்கள் வாகனங்கள் பொருட்கள் கொள்வனவில் கட்டுப்பாடு, புதிய நியமனங்கள் வழங்கும் விடயத்தில் கட்டுப்பாடு.

நட்டத்தில் இயங்கும் தொழில் முயற்சிகள் மூடப்படும் இதற்கமைய 35 தொழில் முயற்சிகள் மூடப்படும்.

அரசாங்க தொழில் முயற்சிகளுக்கு கடன் பெறுவதிலும் உச்ச வரம்பு விதிக்கப்படும்.

## அரசு இன்று உணர்ந்து விட்டது

*-ஜோஸப் எம்.பி-*

(நமது நிருபர்)

போர்ச் செலவை மறுப்பதோ புறக்கணிப்பதோ மடமையாகும் என்கிற உண்மையை ஏழு ஆண்டுகளுக்குப் பிற்பாடு அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. வரவு செலவுத் திட்ட அறிக்கையில் பிரதி நிதியமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இதனைப் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோஸப் பரராசசிங்கம் தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத் திட்டம் சம்பந்தமாகக் கருத்துத் தெரிவித்த ஜோஸப் எம்பி மேலும் தெரிவிக்கையில் கடந்த 80ஆம் ஆண்டு தொடக்கத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 1.5% ல் இருந்தது 2000ஆம் ஆண்டு 6%மாக அதிகரித்துள்ளது. ஆனால் 2001ஆம் ஆண்டு 7.5%மாக உயரக்கூடும். இந்தப் போர் நடைபெறாமல் இருந்திருந்தால் இந்த நாட்டில் தலைக்குரிய் வருமானம் 2500அமெரிக்க டொலராக இருந்திருக்கும் எனவும் தெரிவித்தார்

## தினக்கதிர் கட்டுரைப் போட்டி

(நமது நிருபர்)

கிழக்கிலங்கையின் ஒரே தமிழ் தினசரியான தினக்கதிர் தனது ஓர் ஆண்டு நிறைவையொட்டி மட்டக்களப்பு மாவட்டபாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியொன்றை நடாத்தவுள்ளது.

மேற்படி போட்டி தொடர்பாக மேலதிக விபரங்கள் நாளைய தினக்கதிரில் வெளிவரும் என்பது குறிப்பிடத்தக்கது.

## கண்டெடுத்த அடையாள அட்டை.

(மட்டக்களப்பு நிருபர்)

கிளிவெட்டி, பாரதி புரம்: நாக்மணி வில்வராசா என்பவரது அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு 'தினக்கதிர்' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. உரியவர் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

## ஊடகத் துறையினருக்கு அச்சுறுத்தல்

*-ரொபேர்ட் பேனார்ட்-*

(நமது நிருபர்)

''பத்திரிகையாளர் சுப்பிரமணியம் திருச்செல்வம் இரு மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டிருப்பது அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் ஓர் அச்சுறுத்தல்'' என "வரையறையற்ற ஊடகவியலாளர்கள்'' எனும் அமைப்பின் பொதுச் செயலாளர் ரொபேர்ட் அமைச்சர் பீரிஸ்க்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்


**31ம் நாள் நினைவஞ்சலி**

பிறப்பு 06 ~ 02 ~ 1965



இறப்பு 09 ~ 02 ~ 2001

**செல்வி ரஜனி பிரான்சிஸ்பிள்ளை**

மொட்டாகி, பூவாகி, பிஞ்சாகி
முழுச் சுவையை அனுபவிக்கப் பழமாகாமல்
எட்டாத தூரத்தில் எம்மையெல்லாம்
இடை நடுவே விட்டகன்ற ரஜனி நாங்கள்
பட்டமரம் போலானோம், பாவம் செய்த
பாவிகள் போல் ஆனேமே! கண்ணே உந்தன்
விட்டகலா நினைவதனால் விக்கித்தின்றும்
விழி நீரைச் சொரிந்திட நாம் அழுகின்றோமே!

என்ன பாவம் நாம் செய்தோம்? ரஜனி உன்னை
எண்ணியெண்ணித் துடித்திடவா பிறப்பெடுத்தோம்?
மண்மீது உன் வாழ்வின் மலர்ச்சி கண்டு
மகிழ்வதற்கே நாமிருந்தோம்! எமைப்பிரிந்து
கண்ணைமூடி இறை நாமம் பாடுதற்கா
கடவுளடி போய்ச் சேர்ந்தாய்? ரஜனி இன்றும்
உன் நினைவால் வாடுகின்றோம். உயிரே தேவன்
உனதான்மா சாந்தி பெறச் செய்வாரம்மா!

இங்கணம்
பிரிவால் துயருறும்
குடும்பத்தார்

தகவல் :- C. ரொனால்ட் கொஸ்தா
52 புதிய வீதி, மட்டக்களப்பு

ADVT


இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.